புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

04 ஜனவரி 2019

புதுமை : 03 விதி : 135

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



அரசனை நம்பி
கைவிடப்படும் புருசன்

கப்டன் லோலோ
ஈர நினைவாய்...!

ஓடு...ஓடு...
ஓடிக்கொண்டே இரு...!

தேடும் கண்கள்

தேடும் கண்கள்

பூநாரை - Flemengo

இடம் : பண்ணை, யாழ்ப்பாணம். படம் : குகரூபன்

கொக்கு - Crane

இடம் : மண்டைதீவு, யாழ்ப்பாணம். படம் : க.ஜங்கரன்

எமது சூழலில் இருந்த பல்லுயிர் தன்மை நகர மயமாக்கத்தால் அருகி வருகின்றது. உங்கள் கமெராவில் சிக்கிய பறவைகள், விலங்குகளின் படங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். முடிந்தால் உயிரினங்கள் குறித்து உங்களுக்குத் தெரிந்த தகவல்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

படங்கள், விடயங்களை அனுப்பவேண்டிய முகவரி : puthuvithi@gmail.com

ஓணான் - lizard

இடம் : கோப்பாய், யாழ்ப்பாணம் படம் : செ.ராஜேந்திரா

புள்ளிச் சில்லை

ஆங்கிலம்: Spotted Munia
உயிரியல் பெயர்: Lonchura Punctulata
நீளம் - 12 செ.மீ.
ஆயுள் - 8 வருடங்கள்

புள்ளிச்சில்லை திணைக் குருவி வகையைச் சேர்ந்த சிறுகுருவி. உடலின் மேற்புறம் பழுப்பு நிறமும் அடிவயிறு செதில் போன்ற புள்ளிகளுடனும் காணப்படும். இதன் அலகு திணையை கொத்தி உண்பதற்கு வசதியாக கூம்பு வடிவில் இருக்கும். இதனாலேயே திணைக்குருவி என்று அழைப்பர். சில் வண்டு போன்று சத்தம் எழுப்பும்.

கூட்டமாக வாழும் பண்பு கொண்டது. புற்கள், நார்கள், இலைகளைப் பயன்படுத்தி மென்மையான கூடுகளை அமைக்கின்றன. கூடுகளை பந்து போன்று உருண்டையாக அமைக்கின்றன. ஆணும் பெண்ணும் இணைந்தே கூடுகளை அமைக்கின்றன.

பெண் பறவை 6 முட்டைகள் வரை இடும். ஆணும் பெண்ணும் இணைந்து அடை காக்கும். 15 நாட்களில் குஞ்சுகள் பொரித்து விடும். 7 - 18 மாதங்களில் இனம்பெருக்கும் ஆற்றல் பெற்றுவிடும். சிறு புற்கள், பூச்சிகள், பழங்கள், புற்களின் கிழங்குகளை உணவாகக் கொள்கின்றன. இதன் அழகிய தோற்றத்தால் செல்லப் பறவைகளாகவும் வளர்க்கப்படுகின்றன. இலங்கை, இந்தியா, சீனாவில் பரந்தும் ஆசியக் கண்டம் முழுவதிலும் வாழ்கின்றன.

புள்ளிச் சில்லை தவிர சிவப்பு சில்லை, வெண்தொண்டை சில்லை, கருந்தொண்டை சில்லை, மூவண்ண சில்லை வகைகளும் இப்பறவை இனத்தில் உள்ளன.

பச்சைப் பஞ்சுருட்டான் - Bee Eater

இடம் : அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம். படம் : க.சுரேந்திரகுமார்

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 04 ஜனவரி 2019 | விதி : 135



மலையகத் தலைமைகளிடம் ஒற்றுமையை எதிர்பார்க்கும் முன்னாள் முதலமைச்சர்

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கில் ஒரு தொழிலாளியின் நாளாந்த சம்பளம் ரூபா 1200 இற்குக் குறையாமல் உள்ளது எனவும், எனவே மலையக மக்களின் 1000 ரூபா அடிப்படைச் சம்பளக் கோரிக்கை முற்றிலும் நியாயமானதெனவும் அதைப்பெற மலையகத் தலைமைகள் ஒற்றுமையாக நின்று செயற்பட்டு போராட்டத்தைத் தொடர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் அவர் தோட்ட முதலாளிமாரால் அந்த சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் அரசாங்கம் தலையிட்டு நிதியுதவி வழங்கி அதை நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கினால் இலங்கைப் பொருளாதாரத்தையே உலுக்கி விடும். அப்படியான நிலை முதலாளிமார் சம்மேளனமோ, அரசோ பணிந்து போவதைவிட வேறுவழியில்லை. ஆனால் தொழிற்சங்கத் தலைமைகளோ தாங்கள் ஒவ்வொரு தொழிற்சங்கங்களை வைத்துக்கொண்டு தொழிலாளர் ஒன்றுபடாமல் பார்த்துக் கொள்கின்றனர். போராட்டங்களைத் தனித்தனியே மேற்கொள்வதால் அவை பலமற்றவையாகவே காணப்படுகின்றன. எனவே முன்னாள் முதலமைச்சரின் ஆலோசனை மிகவும் பொருத்தமாகவேயுள்ளது.

ஆனால் அவர்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறி தமிழர் பலத்தை பலவீனப்படுத்தியமை பற்றியோ ஒரு பலமான மாற்று அணி உருவாக விடாமல் கஜேந்திரகுமார் குழப்பம் செய்வது பற்றியோ அவர் எதுவும் கூறவில்லை.

ஊருக்கல்லோடி
கண்ணே உபதேசம்
உனக்கும் எனக்குமில்லையடி

படையினரை வெளியேற்றக் கோரியவர்கள் வாயடைத்துப் போய்விட்டனர்

அண்மையில் கிளிநொச்சியில் வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிடும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அப்பகுதிக்கு வந்திருந்தார். இதன்போது அவர், 'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தினர் அர்ப்பணிப்புடன் பணியாற்றிக் காப்பாற்றினர் எனவும் அதன் காரணமாக படையினரை வடக்கை விட்டு வெளியேற வேண்டும் எனக் குரலெழுப்புவர்கள் வாயடைத்துப் போய்விட்டனர்' எனத் தெரிவித்திருந்தார்.

அதேவேளையில் 2004 ஆதம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின்போது விடுதலைப் புலிகள் ஏராளமான படையினரைக் காப் பாற்றியிருந்தனர். அதன் காரணமாக விடு தலைப் புலிகளுக்கு எதிரான ஆயுத நடவடிக் கைகளை நிறுத்தி அவர்கள் தொடர்ந்து தமது பிரதேசங்களில் நிலைகொள்ள ஏன் அனுமதிக்கவில்லை என்பதைப் பற்றி இளவரசர் எதுவும் கூறவில்லை.

வெள்ள அனர்த்தத்தையடுத்து பாரதிபுரம், பன்னங்கண்டி, கல்லாறு ஆகிய பாதிக்கப்பட்ட முகாம்களுக்குச் சென்று படுக்கை விரிப்புகள், சமையல் பாத்திரங்கள் போன்ற சில நிவாரணப் பொருட்களை அவர் வழங்கியுள்ளார் எனத் தெரிகிறது.

போரினபோது இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கல்லாறு இடைத்தங்கல் முகாம் மீது இலங்கை விமானப்படையினர் கொத்துக்குண்டுகளை வீசி 41 பொது மக்களைக் கொன்றனர். அத்துடன் ஏராளமானோரைக் காயப்படுத்தியிருந்தனர். அங்கு சென்ற நாமல் பலிகொள்ளப்பட்ட மக்களுக்காகக் கண்ணீர் விடவோ, இரங்கல் தெரிவிக்கவோ இல்லை என்பது மட்டுமின்றி, அக்கொலை வெறியை நடத்திய அரச படைகள் தொடர்ந்து வடக்கில் தங்கியிருப்பதை நியாயப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் ரணிலா, மஹிந்தவா பிரதமர் என்ற குழப்பங்கள் உச்சக்கட்டத்தில் நிலவிய போது அரசியல் கைதிகளை விடுவிக்கப் போவதாக முழங்கிய இளவரசர் தற்சமயம் அதைப்பற்றி முற்றாக மறந்து விட்டுப் படையினரை வெளியேற்றும்படி கோரியவர்களின் வாயை அடைத்து விட்டதாகப் பெருமைப்படுகின்றார்.

படையினரை வடக்கு, கிழக்கை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையில் தமிழ் மக்கள் எப்போதும் உறுதியாகவே உள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள அவரின் அரசியல் அனுபவம் போதமால் இருக்கலாம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீலிக்கண்ணீர் விடுவதாலோ, அரசியல் கைதிகளை விடுவிக்கப்போவதாக போலி வாக்குறுதிகள் வழங்குவதாலோ தமிழ் மக்களை விலைக்கு வாங்கிவிட முடியாது என்பதை அவர்கள் வெகுவிரைவில் உணர்வார்கள். தேர்தலை இலக்குவைத்து மேற்கொள்ளும் திருகுதாளங்கள் பயனற்றுப் போகும் என்பது மட்டும் திண்ணம்.

ஆடு நனைகிறது என ஓநாய்
விம்மி விம்மி அழுகிறதாம்

கடந்தவார சமூக வலைத்தளங்களில்

அண்மையில் வெளிவந்த திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி கற்கைநெறிக்கான முடிவுகள் சிலவற்றைப் பார்க்கக்கிடைத்தது. அதிலே பொது விவேகப் பரீட்சையில் 15 இற்கும் குறைவான புள்ளி எடுத்தவர்களும் பாஸ் பண்ணியிருந்தார்கள். பொது விவேகத்தில் 15 இற்கும் குறைவான புள்ளி எடுக்கும் ஒருவன் சட்டத்தரணியாகுமளவுக்கு தமிழ் பிரதேசத்தின் கல்வி நிலமை வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையில் அநேகமான வேலை வாய்ப்புக்கள் பொது அறிவு பொது விவேகம் போன்ற பரீட்சைகளை மையமாக வைத்தே வழங்கப்படுகின்றது. ஆகவே, பிள்ளைகளை சக்தி சூப்பர் ஸ்டாரில் பாட வைக்கும் ஆசையுடன் சங்கீத வகுப்புக்கு அனுப்புவதைவிட, பிள்ளைகளுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது சிறந்தது. அதைவிட, கொமன்சென்ஸ் என்றொரு விடயத்தையும் பிள்ளைகள் பெறும் விதமாக வளர்க்க வேண்டும்.

அது பிற்காலத்தில் பொதுவிவேகக் கேள்விகளைக் கையாள உதவும். அதுமட்டுமல்ல, வாழ்க்கைக்கும் அந்த கொமன்சென்ஸ் மிகவும் முக்கியம். புத்தகப் பூச்சிகளாக இருந்து டிகிரி எடுத்துவிட்டு, இலங்கை என்ற ஒரே காரணத்தினால் பொறுப்பான வேலைகளை எடுத்துக்கொண்டு, சின்னச் சின்ன அடிப்படை விடயங்களைக் கூடப் புரிந்து கொள்ளாமல் சிலர் பண்ணும் அலப்பறைகளைப் பார்க்கும் போது ஆத்திரம் ஆத்திரமாக வருகின்றது.



பணத்தை வைத்து கொண்டு கவலைகளோடு வாழ்பவனை விட வறுமையிலும் மகிழ்ச்சியாக வாழதெரிந்தவர்களே சிறந்தவர்கள்..!!



2019 இந்த பக்கமாத்தான் வருதாம்.



மவனே வாடா வா

அப்பா ஏன் இத வாங்க இவ்ளோ யோசிக்கிறாரு? அப்பா ஏன் புது கார் வாங்காம பழைய கார் வாங்குறாரு? அப்பா ஏன் அவருக்கு 500ரூபாய்க்கு மேல சட்டை வாங்க மாட்டேங்குறாரு? அப்பா ஏன்.. அப்பா ஏன்... இந்த கேள்விக்கெல்லாம் விடை நாமும் குடும்பத் தலைவன் ஆகும்போது கிடைக்கிறது!

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

தேர்தல் பராக்...! பராக்...!

ஒரு காலத்திலும் ஒன்றிணையாத மூவேந்தர்கள் என சிறப்பிக்கப்படும் சேர - சோழ - பாண்டிய மன்னர்கள், பரம்பு தேசத்தின் மன்னன் பாரியை கொல்வதற்காக ஒன்றிணைந்தார்கள் என்று வரலாற்றுக் கதையுள்ளது. நாட்டின் ஆட்சியை சீரான நெறிமுறையில் கொண்டு செல்ல ஒன்றிணைந்து செயற்படாத ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இப்போது தேர்தல் விடயத்தில் ஒன்றிணைந்துள்ளனர்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் பின்னர் நான்கரை ஆண்டுகளுக்குப் பின்னரே நாடாளுமன்றத் தேர்தலை நடத்த முடியும். அதாவது வரும் ஓகஸ்ட் மாதத்தின் பின்னரே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம். ஆனால் அண்மையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் ஒவ்வொரு தரப்பும் தேர்தலை நடத்துவது தமக்குச் சாதகமாக அமையும் எனக் கருதுகின்றன. அத்துடன் அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே நாடாளுமன்றில் பிரேரணை ஒன்றை கொண்டுவருவதன் மூலம் தேர்தலை முற்கூட்டியே நடத்தி விட முடியும் என்பது முக்கிய அரசியல் கட்சிகளின் - தலைமைகளின் எண்ணமாக உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை முற்கூட்டியே நடத்து வதன் மூலம் ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபை களின் - முக்கியமாக வடக்கு, கிழக்கு மாகாண சபைகளின் தேர்தல் மேலும் பிற்போடப்படும் ஏதுநிலை தோன்றியுள்ளது. இந்த நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எதிர்க் கருத்துக்கள் கிளம்பினாலும் கட்சியின் பேச்சாளர் அனைவரையும் அடக்கி விட்டார் என்று தம்மைக் காட்டிக் கொள்ள விரும்பாத கட்சியின் முக்கியஸ்தர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சிங்கள - பௌத்த மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கான நடவடிக்கையில் தற்போதைய அரசாங்கம் இறங்கியுள்ளது. மகாநாயக்க தேரர்களை சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரசிங்க புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் பௌத்தத்துக்கே முக்கியத்துவம் அளிக் கப்படும் எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். இதே சிங்கள - பௌத்தர்களின் வாக்குகளைக் கவர திரிபீடகம் நூலை தேசிய மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் சுமந்திரன் 'புதிய அரசியலமைப்பு ஒற்றையாட்சி தன்மை கொண்டதல்ல" என்று கூறினார். அத்துடன் வரும் பெப்ரவரியில் புதிய அரசியலமைப்பு என்று வாக்குறுதியளித்தார். ஆனால் கடந்த வார சம்பவங்கள் எல்லாம் இவரது வாக்குறுதிகளை நம்பகத்தன்மையற்றதாக்கிவிட்டன. இவ்வாறான நிலையில் நாடாளுமன்றில் புதிய அரசியலமைப்பு முன்வைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பியிருக்கும் ஜக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை. புதிய அரசியலமைப்பை எதிர்த்தே தீருவோம் என மஹிந்த ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்திருப்பதால் புதிய அரசியலமைப்பு என்பது கானல் நீரே.

எது எப்படி இருப்பினும் மக்கள் விரைவில் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கப்போவது உறுதியாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காட்டும் புதிய அரசியலமைப்பு என்ற கானல் நீரை நம்ப தமிழ் மக்கள் தயாராக இல்லை. தமி ழர் தாயகத்தில் கூட்டமைப்புக்கு எதிராகப் பலமான கூட்டு அமையக்கூடும் என்ற நிலையில், தமிழர்களின் ஒற்றுமையே தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 34

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

பக்கத்தில் நிதர்சனக் காயத்திரி என்ற போராளி. நல்ல துணிவு தான் என நினைத்தபடி பிள்ளையார் கோவிலடியை நோக்கி ஓடத் தொடங்கினேன். இறுதியாக நாமிருந்த பிள்ளையார் கோவிலடியில் ஒரு வீட்டில் அவரைக் கண்டேன். ஒரு ஜெனரேட்டர் அவரது மடிக்கணினியை உயிர்ப்பித்துக் கொண்டிருந்தது. தன்னிடமிருந்த ஆவணப்படங்களை சேகரிக்கும் முயற்சியில் இருந்தார். அந்த வீட்டில் தான் குளிப்பதற்காக சென்ற போது பின்பக்கத் தோற்றத்தில் அவரைப்போல இருப்பதால் குளித்த பின் கிட்டச்சென்று அழைத்தேன். கஜானி சித்திதான்.

"சித்தி "என்ற அழைப்புக்குள் அவர்கள் உலகம் துயரத்தை மறைத்து சிரிக்கும் அழகிருக்கிறதே அதை எந்தவிலை கொடுத்தும் எந்த உலகிலுமே வாங்க முடியாது. ஒருவர் நலனை ஒருவராக மாறி மாறி விசாரித்தோம். அவர் தனது வேலையில் கவனமாக இருந்து கதை சொல்லிக் கொண்டிருந்தார். அவரது வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் போவதற்காக விடை பெற்றேன்.

எனது தோழி எனது கைக்குழந்தை யோடு என்னைத்தேடி வந்தாள். குழந்தை, விழித்துக் கொண்டதால் தனக்கான உணவுத் தேடலின் சமிக்ஞையாக அழுகையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. குழந்தையை வாங்கி பாலூ ட்டத்தொடங்கினேன். எனக்கும் பசித்தது. இப்போதைய தேவை உணவு. இராணுவ வாகனம் முட்கம்பி வேலியருகில் வந்து நின்றது. சனங்கள் திமிறியடித்து எழுந்தோடி முட்கம்பி வேலிகளையும் முறித்து விழுத்துவது போல எந்த ஒழுங்கும் - மனித நாகரிக நிலையுமின்றி பசித்த வயிற்றை நிரப்பும் நெஞ்சினராய் கையேந்தி நின்றனர்.

உணவுப்பொதிகள் எறியப்பட்டன. சனங்களுக்குள் நெருங்கியடித்து உணவைப்பெறும் வல்லமை எனக்கிருக்கவில்லை. முட்கம்பி வேலியோரமாக சனச்செறிவு குறைந்த ஓரிடத்தில் நின்றேன். சாப்பாட்டுப் பொதி ஒன்று கிடைத்துவிட வேண்டும் என்ற எனது வேண்டுகோளை கடவுளிடம் விண்ணப்பித்தபடி மனம் இருந்தது. மாயமோ மந்திரமோ நானறியேன். எனது கையில் ஒரு உணவுப் பொதியை இராணுவப்பெண் ஒருத்தி தந்தாள். மனதுக்குள் ஒரு பரவசம். லட்சங்கள், இலட்சியங்கள் எல்லாமே தோற்றுப்போய் உணவே வாழ்வின் ஆதாரம் என உறுதிப்படுத்திய அந்தப் பொழுதை மனதில் குறித்துக் கொண்டு" என் மகள் அதிர்ஷ்டசாலி என எண்ணியபடி கைகளில் இருந்து நழுவிய பிள்ளையை சற்று சீர்செய்து உடலோடு அணைத்துக்கொண்ட போது தான் அந்தச்சம்பவம் நடந்தது.

எனது கையிலிருந்த உணவுப் பொதியை காகம் எத்திப் பறிப்பது போல் பறித்து மிக வேகமாக ஓடத் தொடங்கினான் ஒரு இளைஞன். திடுக்கிட்டு என்னைச் சுதாகரித்துக் கொள்ளப் பல நிமிடங்கள் எடுத்தது. நினைத்துப் பார்க்க முடியாத வேதனையால் துடித்துப்போனேன். கைக்குழந்தையோடு நின்றதாலேயே எனக்கு அந்த உணவுப்பொதி மிக இலகுவாகக் கிடைத்தது. உணவுப்பொதி கிடைத்தபோது எனது மகள் அதிர்ஷ்டசாலி என மனதில் நினைத்துக் கொண்டதையும் - இப்போது கிடைத்த உணவு கையிலிருந்தே பறிபோய் விட்டதே என நினைத்தபோது ஏனோ மனது சங்கடப்பட்டது. 'டேய்... நில்லடா. டேய்... தாடா..." எனக் கத்த வேணும் போலிருந்தது கத்த முடியவில்லை.

ஆமிக்காரப்பெண் சிங்களத்தில் அந்த இளைஞனை உரக்கக் கத்தி திட்டிய சத்தத்தில் சுயநினைவுக்கு வந்தேன். நான் ஒன்றுமே பேசமுடியாத நிலையில் இருந்தேன். எவ்வளவு உயர்ந்தபட்ச நாகரிகமுடைய இனமாக வாழ்ந்தோம். பசித்த முகமறிந்து உணவு கொடுத்த இனம் எமது. 'பசிக்குது" என வாய்விட்டு கேட்பதையே கௌரவக் குறைச்சலாக நினைத்தவர்கள் தமிழர்கள். உறவுகளின் வீடுகளுக்குப்போனாலே 'சாப்பிட்டியா ?" எனக்கேட்டால் எவ்வளவுதான் பசித்திருந்தாலும் 'இப்பதான் சாப்பிட்டோம்" எனக்கூறி கௌரவத்தை காத்தவர்கள் தமிழர்கள்.

இன்று ஆடு, மாடு,எருமை போன்று மந்தைகளுக்கு பட்டியடைத்து விட்டது போல நிலையை உருவாக்கியதோடு, வழிப்பறிக் கொள்ளையர்கள்போல உணவையும் தண்ணீரையும் உடைமைகளையும் கொஞ்சம்கூட வெட்க துக்கமின்றி பகலிலேயே கொள்ளையடிக்க வைத்த போரை என் மனம் அடியோடு வெறுத்தது. போரின் சூத்திரதாரிகளிடமே கையேந்தி உண்ணும் அவலம் பெற்றோம். போரின் கொடூரர்களே மீட்பர்களாக மாறும் வேடங்கள் கண்டோம். போரின்போது அரக்கர்களாய் கொன்று குவித்தவர்களே மீட்பர்களாக நாடகமாடும் இரட்டை வேடம் அரங்கேறி நடந்து கொண்டிருந்தது. இன்னும் நடக்கும். இனியும் பற்பல வேடங்களைக் காணப்போகிறோம்.

போரும் பசியும் விரக்தியும் விகாரங்களும் சூழ்ந்து உறவுகளின் உயிர்களை இழந்து, வீடிழந்து -வாசலிழந்து - நாடிழந்த மக்கள் நாகரிகங்களும் ஒழுக்க விழுமியங்களோடும் இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியாததே. பஞ்சம் பசி வந்தால் எல்லா சுய கௌரவங்களும் செயலிழந்து விடும் போல. என்னிடமிருந்து உணவைப் பறித்து செல்பவனை எந்த வகைப்பாட்டில் சேர்த்துக்கொள்வேன்? இளைஞன் என்ற நிலையை அவனால் உணரமுடியாத வறியவன் அவன். இந்நேரம் அவன் இலட்சக்கணக்காக குவிந்திருந்த சனக்கூட்டத்தில் மறைந்து எங்கோ ஒரு மூலையில் பசிக்களை தீர உணவை உண்டு கொண்டிருப்பான்.

(சாட்சியம் நீளும்)

புதுவிதி

அரசனை நம்பி கைவிடப்படும் புருசன்

■ யோகநாராயணன்

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்ட பெண் கடைசியில் அரசனுமின்றிப் புருசனுமின்றித் தெருவில் நின்றாளாம் என்றொரு பழமொழி தமிழில் உண்டு. தமிழ் மக்களின் நிலையும் அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டவளின் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விடக்கூடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளருமாகிய எம்.ஏ.சுமந்திரன் யாழ்ப்பாணத்திலுள்ள தனது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போது அரசியலமைப்பு மீறப்படுவதைத் தடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட நடவடிக்கையால் ஏற்பட்ட விளைவுகள் மிக முக்கியமானவை எனவும் அதில் ஒன்று நாட்டின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது எனவும் மற்றது சிங்கள மக்களிடையே நாட்டுக்கும் நாட்டு நலனுக்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டது என்ற நல்லெண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அதன் காரணமாக அவை புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் பெரும் பங்கை வகிக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். மேலும் பெப்ரவரி 4 ஆம் நாளின் முன்பு தாங்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து நாடாளுமன்றத்தில் புதிய அரசியலமைப்புக்கான வரைபைச் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அதற்கு சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த நல்லெண்ணம் பெரும் பங்கு வகிக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரது மேற்படி கருத்துக்கள் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் இரு கேள்விகள் எழுந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது. ஒன்று - கடந்த காலங்களில் வரவு - செலவு திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியது. அப்போதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது சிங்கள மக்களுக்கு உருவாகாத நல்லெண்ணம் அரசியலமைப்பு விவகாரத்தினால் மட்டும் ஏற்பட்டு விடமுடியுமா? அப்படி ஒரு நல்லெண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டு விட்டதாக ஒரு வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும்கூட அந்த மாற்றம் நாடாளுமன்றத்துக்குள் செல்வாக்கைச் செலுத்த முடியுமா?

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமற் செய்து புதிய அரசியலமைப்பின் மூலம் நாட்டை 9 பிரிவுகளாகப் பிரித்துத் துண்டாடப் போகிறார்கள் எனச் செல்லுமிடமெங்கும் ஒப்பாரி வைத்து வருகிறார். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் அதைவிட மோசமான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்தோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமிருந்தோ, பொதுஜன பெரமுனவிடமிருந்தோ புதிய அரசியலமைப்பு வரைபுக்கு ஆதரவாக ஒரு வாக்கைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது திண்ணம். அப்படியானால் சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நல்லெண்ணம் எப்படிப்பட்டது என்பதே அதன் விளைவாக பயன் எதுவும் கிட்டக்கூடும் என எதிர்பார்க்க முடியுமா?

ஒருமித்த நாட்டுக்குள் பிரிக்கப்படாத, பிரிக்கப்படமுடியாத அதிகாரப் பகிர்வு என சம்பந்தனும் சுமந்திரனும் மீண்டும் மீண்டும் சொல்லி வந்த போதிலும் நாடு பிரிக்கப்படப் போகிறது எனவும், பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தால் செய்ய முடியாததைக் கூட்டமைப்பினர் புதிய அரசியலமைப்பு மூலம் செய்யப் போகிறார்கள் எனவும் மஹிந்த தரப்பு மேற்கொள்ளும் பிரசாரங்களை இன்றும் சிங்கள் மக்கள் முழுமையாக நம்பியுள்ளனர் என்பது தெளிவான விடயமாகும். சுமந்திரன் சொல்வது போன்று ஒரு நல்லெண்ணம் உருவாகியிருந்தால் அந்தச் சிங்கள மக்களின் பிரதிநிதிகளான மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட ஏன் மனம் மாறவில்லை.

இரண்டாவது விடயம் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்புக்கான வரைபு எப்படி அமையப்போகிறது என்பதாகும். உத்தேச அரசியலமைப்பு வரைபில் சிங்களத்தில் ஒரே நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு எனவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாகக் கடந்த காலங்களில் பலத்த சர்ச்சைகள் எழுந்தமையை நாமறிவோம். இப்படியான விடயங்களில் மதம் சம்பந்தமான பிரச்சினை எனும்போது பௌத்தமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பது அரசியல் சாசனத்தில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். ஆனால் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் ஒன்றுபட்ட, பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வு என மீண்டும் மீண்டும் கூறி வருகின்றனர். சுமந்திரன் அதற்கான வாதங்களையும் முன்வைத்து வருகின்றார். பௌத்தத்துக்கு முதன்மை இடம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அதனால்தானோ என்னமோ பிரதமர் வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைக்கப் போவதாக அறிவித்த போதும் அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

எனவே அதே அடிப்படையிலான ஒரு முன்மொழிவு வரைபை பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்பாக முன்வைக்கப்படக்கூடும். இதற்கும்கூட மஹிந்த தரப்பினர் எதிர்ப்பை வெளியிடுவர் என்பதில் சந்தேகமில்லை. எனினும் இந்த உத்தேச வரைபு சில வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட வாய்ப்புண்டு. ஆனால் இதன் இறுதி வரைபு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு பின்பு மக்கள் கருத்துக் கணிப்பு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலே அது அரசியலமைப்பாக அங்கீகாரம் பெறும். (22ஆம் பக்கம் பார்க்க)



> பெப்ரவரி நான்காம் நாள் இலங்கையின் சுதந்திர தினம் என்பதை நாம் அறிவோம். அதேபோன்று மார்ச் மாதத்திற்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு அதாவது மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெறும் மாதம். அதிலும் இலங்கை தொடர்பாக இலங்கையின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற வழங்கப்பட்ட மேலதிக இரண்டு வருடகால அவகாசம் முடிவுக்கு வருகின்றது.

இலங்கையின் பால்நிலை சமத்துவமற்ற ஊடக கல்வியும் - தொழிற்துறையும்

எல்லா இடங்களிலும், எல்லாத் துறைகளிலும் பெண் இருக்கிறாள். பெண்ணால் எல்லா இடங்களிலும் இருக்க முடியும். ஆனால், பெண் அதிகாரத்தை அல்லது பெண்களால் நிர்வகிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளாத ஓர் ஆணாதிக்க சமூகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51 வீதமானவர்கள் பெண்கள். இலங்கைக்கு அதிகளவான அந்நியச் செலவாணியை ஈட்டித் தருபவர்களாகவும் பெண்களே இருக்கிறார்கள். ஆனால், இலங்கையில் பால்நிலைச் சமத்துவம் என்பது பெயரளவிலேயே உள்ளது.

எமது நாட்டிலும் கூடப் பல பெண்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. பல பெண்களுக்கு தாம் விரும்பிய துறையை தெரிவு செய்து கல்வி கற்பதற்கான வாய்ப்பு மறுக்கப் பட்டிருக்கிறது. பெண்கள் எந்தத் துறையைத் தெரிவுசெய்து கல்வி கற்க வேண்டும் என்பதை குடும்பமும் சமூகமும் தீர்மானிக்கின்றமையை காணக்கூடியதாக இருக்கின்றது.

அதேவேளை ஊடகத்துறையைத் தமக்கான துறையாகத் தெரிவு செய்வதில் பெண்கள் பின்னிற்கிறார்கள் அல்லது ஊடகத்துறையைத் தெரிவுசெய்வதை அவர்கள் சார்ந்த குடும்பம் மற்றும் சமூகம் அங்கீகரிக்கவில்லை. அதையும் தாண்டி ஊடகத்துறையைத் தமது பட்டப்படிப்பிற்காகத் தெரிவுசெய்பவர்களில் பெரும் பாலானோர் தமது தொழில்துறை யாகத் ஊடகத்துறையைத் தெரிவுசெய்வதில் பின்னிற்கின்ற மையைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் ஊடகக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ள நிலையில், அத்துறையில் கல்விகற்றவர்கள் அத்துறையில் ஈடுபடாது இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் இரண்டு தேசிய பல்கலைக்கழகங்களில் மாத்திரமே தமிழ்பேசும் மாணவர்களால் ஊடகத்துறைப் பட்டத்தைப் பெறமுடியும். யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலமும் மற்றையது திருகோணமலை வளாகத்தில் ஆங்கில மொழி மூலமும். அது தவிர்ந்து தமிழ்பேசும் மாணவர்கள் ஊடகக் கல்வியைத் தொடர வேண்டுமாக இருந்தால் சிங்கள மொழிமூலமாகத்தான் களனிப் பல்கலைக் கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீபாளி வளாகம், ஸ்ரீஜெயவர்தனபுரப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் போன்றவற்றில் பட்டப் படிப்பைத் தொடரமுடியும். எதிர்காலத்தில் ஊவாவெல்லஸ பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிமூலமாக ஊடகத்துறைப் பட்டப்படிப்பு அறிமுகம் செய்யப்பட இருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஊடகத்துறைசார்ந்த முதுமானிப் பட்டப்படிப்புக்களைத் தொடர்வதற்கான வாய்ப்புக்களும் இலங்கையில் மிக அரிதாகவே உள்ளது. இலங்கையின் சில அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் ஊடகத்துறைசார்ந்த டிப்ளோமா பட்டங்களை வழங்குகின்றன.

இந்நிலையில் ஆங்கில மொழிமூலம் ஊடகத்துறைப் பட்டத்தை வழங்கும் திருகோண மலை வளாகத்தில் தமிழ்பேசும் பெண் மாணவிகளுடைய தொகை மிகக் குறைவாகவே உள்ளது. தற்போதைய கல்வியாண்டில் இரண்டாம் வருடத்தில் இரண்டு தமிழ்பேசும் பெண்களும், மூன்றாம் வருடத்தில் ஆறு தமிழ்பேசும் பெண்களும் கல்வியைத் தொடர்கின்றவேளை, நான்காம் வருடச் சிறப்புக் கற்கையில் எந்த ஒரு தமிழ்பேசும் மாணவியும் இல்லை. யாழ் பல்கலைக் கழகத்தை எடுத்துக்கொண்டோமானால் அங்கும் குறைந்தளவிலான தமிழ்பேசும் பெண்களே ஊடகக் கல்வியைத் தொடர்கின்றனர்.

கல்வியில் மட்டுல்ல இலங்கையின் ஊடகத்துறையில் தொழில்புரிவதும் பெண்களுக்கு சவால்மிக்கதாகவே இருக்கிறது. ஊடக நிறுவனங்கள் வேலை வாய்ப்பை வழங்கும் போதும், வேலைப் பகிர்ந்தளிப்பிலும் பால்நிலைச் சமத்துவத்தைப் பேண வேண்டும். 2011ஆம் ஆண்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 31 அச்சு ஊடக நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 192 பெண் ஊடகவியலா ளர்களும் 464 ஆண் ஊடகவியலா ளர்களும் இருப்பதாகக் கூறுகின் றது. அதாவது, 29.5 வீதமான பெண்களே ஊடகவியலாளர் களாக இருக்கிறார்கள். இதில் தமிழ்பேசும் பெண்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். அண்மைய ஆய்வுகள் ஆங்கில ஊடகங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளதாகக் கூறுகின்றன.

ஊடகத்துறையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக, இலங்கையின் தமிழ் அச்சு ஊடகங்களில் பெண்களின் வகிபாகம் குறைந்த அளவில் உள்ளது. பெரும்பாலான அச்சு ஊடகங்கள் ஆணாதிக்கக் கட்டமைப்பின் கீழேயே இயங்கிவருகின்றன. அச்சு ஊடகங் களில் பெண் ஊடகவியலாளர் களின் நிலையை நோக்கினால் உயர்பதவிகளில் பெண்கள் அங்கம் வகிப்பதில்லை. ஊடகவியலாளர்களுக்கு மேலதிக கல்வி மற்றும் திறன் விருத்திக் கான வாய்ப்பு குறைவாகக் காணப் படுவதுடன் செயலமர்வுகளுக்கும் அனுப்பப்படுவதில்லை.

பெறுமானமுடைய உள்ளடக் கங்களில் பணியாற்ற அனுமதிப் பது குறைவு, தீர்மானம் எடுக்கும் வாய்ப்பு குறைவு, செய்திசேகரிப்பு மற்றும் செய்தித் தொகுப்பு போன்றவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு என்பனவும் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன. தமிழ் அச்சு ஊடகங்களில் பத்திரிகையாசிரியர் பதவி பெண்களுக்கு வழங்கப்படுவ தில்லை. நிருபர்களாகவோ, உதவி ஆசிரியர்களாகவோ தான் பெண்கள் பதவி வகித்துவருகிறார் கள். ஆளுமை நிறைந்த எத்த னையோ பெண்களுடைய வாய்ப் புக்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன.

தாக்கமிக்க துறைகளில் முக்கியமானவை ஊடகங்கள். அவற்றில் பெண்கள் கருத்தியல் ரீதியாக மிகக்குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படு கின்றனர். அத்துடன், ஊடகங் கள் பெண்களுக்கு என்று ஒரு கட்டமைப்பினையும் ஏற்படுத்தி விடுகின்றமை நோக்குதற்குரிய தாகும். பெண்களுக்கு அரசியல் கலாச்சாரம் பற்றி பேசத் தெரியாது. ஆனால், அதைப் பேணுவதற்கும் பின்பற்றுவதற்கும் பெண்தான் தேவை என்றவாறான ஒரு கட்டமைப்பை ஊடகங்கள் கொடுத்து வருகின்றன.

பெரும்பாலான ஊடகங்கள் சமாதானம் பற்றியோ அரசியல் பிரச்சினைகள் பற்றியோ பெண்களிடம் கருத்துப் பகிர்வுகளை மேற்கொள்வது குறைவாகவே உள்ளது அல்லது பெண்களுடன் கருத்துப்பகிர்வை மேற்கொள்வதில்லை என்றுதான் கூறவேண்டும். பெண்கள் தொடர்பாக வரக்கூடிய நிகழ்ச்சி கள், செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றில் பெண்களின் குடும்ப அலகு பற்றி மட்டுமே அழுத்தம் கொடுத்துப் பேசப்படுவதாகவுள்ளது. அழகுக்கலை, சமயற்கலை, கலை, கலாசாரம் போன்றவை சம்பந்தமான உள்ளடக்கங்களைத் தான் வெகுஜன ஊடகங்களில் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்குகிறார்கள்.

அரசியல் மற்றும் பொருளாதாரம் சம்பந்தமான நிகழ்ச்சிகளிலோ, ஆய்வுகளிலோ, கட்டுரைகள், விமர்சனங்கள், நேர்காணல்கள் போன்ற கனதியான விடயங்களில் பெண்களின் பங்கு கேள்விக்குறியாகவே இருக்கிறது. நேர்காணல்களை செய்பவர்களாகவும் நேர்காணப்படுபவர்களாகவும் பெரும்பாலும் ஆண்களே இருக்கிறார்கள். ஊடக நிறுவனங்களில் பாலியல் ரீதியான சுரண்டல்கள், வன்முறைகள் போன்றவற்றை பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. பெரும்பாலான பெண்கள் தமது தொழில்பாதுகாப்புக்கருதி தமக்கெதிரான வன்முறைகளையும் நிராகரிப்புக்களையும் சகித்துக்கொண்டுவாழப் பழகியுள்ளனர்.

செய்தி அறைகளில் சமத்துவம் நிலவவேண்டும். காலங்காலமாக ஊடகங்களில் நடைபெறும் ஒடுக்கு முறைகளைச் சகித்துக்கொள்ள ஆரம்பித்தோமானால் மாற்றம் ஏற்படவாய்ப்பில்லாது போகும். எனவே, செய்தி அறைகளில், ஊடக நிறுவனங்களில் பெண்கள் தமது உரிமைகள் நிராகரிப்புக்கு எதிராக தாமே குரல்கொடுக்க வேண்டும். தமது பிரச்சினைகளுக்காகப் பேசவேண்டும். ஊடகங்கள் சமூகத்தின் விம்பங்கள். ஊடக நிறுவனங்களிலேயே பால்நிலைச் சமத்துவம் இல்லாத போது அவர்கள் எவ்வாறு பால்நிலைச் சமத்துவம் பற்றிய புரிதலை சமூகத்திற்கு வழங்க முடியும். பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண் கல்வி என்பன அடிப்படை மனித உரிமையாகும். ஊடகத்தொழில் துறையில் மாத்திரமல்லாது ஊடகக்கல்வியிலும் தம்மை நிலைநிறுத்திக்கொள்ளும் சவாலைப் பெண்கள் துணிச்சலோடு எதிர்கொள்ள வேண்டும். பெண்கள் தமது துறைசார்ந்த ஆளுமையை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஊடகத்துறையில் ஆணாதிக் கத்தை மீறிச் சில பெண்களால் மாத்திரமே சாதிக்க முடிந்துள்ளது. ஆணாதிக்கவாத சமூதாயத்தால் நிராகரிக்கமுடியாதவர்களாக நாம் மாறவேண்டும். பெண்கள் சிந்தனையாலோ, அறிவாற்றலாலோ அல்லது எந்த வகையிலும் ஆண்களைவிட குறைந்தவர்கள் அல்லர். இலங்கை ஊடகங்கள் ஊடகத்துறையில் பன்மைத்துவத்தைப் பேணவேண்டும்.

"நிமிர்ந்த நன்நடை
நேர்கொண்ட பார்வையும்
யார்க்கும் அஞ்சாத
நிமிர்ந்த ஞான செருக்கும்
இருப்பதால்
செம்மை மாதர்
திறம்புவதில்லையாம்"

நன்றி: மாற்றம்

தொப்பை மறைக்காதீர்கள், குறையுங்கள்

நாம் - நமது உடல் இயங்க சக்தி -கலோரி அவசியம். தேவைக்கு அதிகமான கலோரி கிடைக்கும்போது உடல் அதை சேமிக்கிறது. பொதுவாக ஆண்களுக்கு வயிற்றிலும் பெண்களுக்கு இடுப்பு மற்றும் அதன் கீழ்ப் பகுதியில் கொழுப்பு சேமிக்கப்படுகின்றது. இதுவே தொப்பைக்குக் காரணம். சுருங்கச் சொல்லின் வயிற்றில் சேமிக்கப்பட்ட தேவையற்ற கொழுப்பே தொப்பை.

ஆண்களுக்கு ஏன்?

உடலில் மெல்லிய உறுப்புகள் இருக்கும் பகுதியிலேயே கொழுப்புப் படியும். ஆண்கள் உடலில் மென்மையான - அதிக வேலையற்ற பகுதி அடிவயிறு. இதனாலேயே அங்கு கொழுப்பு சேர்கிறது. பெண்களுக்கு அடிவயிற்றில் கர்ப்பப்பை இருப்பதால் அதன் செயற்பாடு பாதிக்காதவாறு தொடை இடுப்புப் பகுதிகளில் சேர்கிறது.

காரணங்கள்

மரபு வழி, கட்டுப் பாடில்லாத உணவுப் பழக்கம், உடல் உழைப்பு இன்மை, ஹோர்மோன் குறைபாடு எனப் பல காரணங்கள். ஆனால் அதிகமாக உண்ணல், உழைப்பு இன்மை இவையே அடிப்படைக் காரணங்கள்.

குறைப்பதா? மறைப்பதா?

அதிகமானோருக்கு தொப்பை பிரச்சினை உள்ளது. ஆனால் தொப்பையைக் குறைக்க முயல்வோர் சிலரே. பலர் சற்றுப் பெரிய உடை, பெல்ட் என்பவற்றைப் போட்டு மறைக்க முயல்கின்றனர். வேறு சிலர் எல்லோருக்கும் வருகிறது, தொப்பை யும் அழகுதான் என்று கூறிச் சமாளிக்கின்றனர். மறைப்பதன் மூலம் அழகை சமாளிக்கலாம்! பாதிப்புகளை...?



தீர்வுகள்

- மரபு ரீதியான தொப்பை உள்ளவர்களுக்கு ஓரளவே கட்டுப்படுத்த முடியும். வாழ்க்கை முறை மாற்றம் அவசியம்.
- ஹோர்மோன் குறைபாடு உள்ளவர்கள் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும்.
- வளர்சிதை மாற்றத்தைத் தூண்டும், பசியைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை மருத்துவரின் ஆலோசனை பெற்றுப் பயன்படுத்தலாம்.
- தினமும் 30 நிமிட நடைப்பயிற்சி, நீச்சல், சைக்கிளோட்டம் அவசியம்.
- மதுவைத் தவிர்க்கவும்.

உணவுப் பழக்கம்

- அதிகளவு தண்ணீர் குடிக்கவும். இது பசியைக் கட்டுப்படுத்தும், கழிவுகளை வெளியேற்றும்.
- சரியான நேரத்துக்கு சரி விகித உணவு உண்ண வேண்டும்.
- காலை உணவு அவசியம். உண்ணும் முன் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுங்கள்.
- கோப்பி, தேநீரை தவிர்க்கவும். பதிலாக மூலிகை தேநீர், லெமன் தேநீர், கிறீன் தேநீர் ஆகியவற்றை சிறிது சீனி சேர்த்துக் குடிக்கலாம்.
- வெள்ளை சீனியை அறவே தவிருங்கள். மாற்றீடாக பிறவுண் சீனி, தேன், பனங்கட்டி பயன்படுத்தலாம்.
- சாப்பிட்டவுடன் நித்திரையை தவிர்க்கவும்.
- அரிசி, கிழங்குகளை தவிருங்கள். கைகுத்தல் அரசி, ரவ்வை, ஓட்ஸ், பார்லி கஞ்சி பயன்படுத்தலாம்.
- சாப்பிடும் போது நன்றாக மென்று உண்ணுங்கள்.
- சாப்பிடும் போது தொலைக் காட்சி பார்த்தல், கைபேசி பயன்பாட்டை தவிருங்கள். இதனால் அளவுக்கதிகமாக உண்பீர்கள்.
- தயிர், நெய், வெண்ணெய் தவிர்த்து பதிலாக மோர், யோக்கர்ட் (கொழுப்பு நீக்கப்பட்டது) பயன்படுத்தவும்.
- வெங்காயம், பூண்டு, இஞ்சி, பயறு வகைகள், பச்சை காய்கறிகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.
- உப்பு, எண்ணெய் குறைக்கவும். 15 மி.லீ. எண்ணெய் போதும்.
- வெதுப்பக உணவு, செயற்கை குளிர்பானங்களை தவிர்க்கவும்.

உணவே மருந்து

முருங்கை இலை

முருங்கையின் இலை, காம்பு, பூ, காய், பிசின், பட்டை என அனைத்தும் மருத்துவ குணம் கொண்டது. காட்டு முருங்கை, கொடி முருங்கை, தவசி முருங்கை என இதில் பல வகைகள் உள்ளன.

■ முருங்கை இலையில் இரும்பு, தாமிரம், கல்சியம், விற்றமின் உள்ளிட்ட சத்துகள் இருக்கின்றன. இதனை நெய் விட்டு வதக்கிச் சாப்பிட்டால் இரத்தச்சோகை நீங்கும். பற்கள் இறுக்கமாகும். தோல் நோய்கள், பார்வைக் குறைபாடுகள் நீங்கும்.



மாலைக்கண் நோயும் சரியாகும். மலச்சிக்கல் நீங்கும்.

■ முடி உதிர்தல் பிரச்சினைக்கு முருங்கை யிலை நல்ல தீர்வு. வாரத்தில் மூன்று நாள்களேனும் இதனை உணவில் சேர்த்தால் தாய்ப்பால் சுரப்பு மேம்படும்.

■ முருங்கை இலையுடன் சம அளவு மிளகு சேர்த்து நசுக்கிச் சாறு எடுத்து, தலைவலி உள்ள இடத்தில் பற்றுப் போட்டால் நிவாரணம் கிடைக்கும். வெறும் இலையை அரைத்து வீக்கத்தின்மீது தடவினால் வீக்கம் விலகும்.

■ முருங்கை இலைச் சாற்றுடன் சுண்ணாம்பு சேர்த்துப் பிசைந்து தொண்டையில் பூசினால் தொண்டைக்கட்டு, தொண்டைக் கரகரப்பு விலகி, சளிப் பிரச்சினைகள் நீங்கும்.

■ முருங்கை இலை, மிளகு, சீரகம் சேர்த்துக் கொதிக்க வைத்த ரசத்தைக் குடித்தால் மூட்டுவலி குணமாகும்.

■ முருங்கை இலையைப் பொடியாக நறுக்கி அதனுடன் சீவிய கரட், நெய், முட்டை, உப்பு, மிளகாய்த்தூள் சேர்த்து வறை செய்து சாப்பிட்டால் உடல் பலம் கிடைக்கும்.



காலை உணவு கட்டாயம்!

மருத்துவரின் செய்தி

காலையில் சாப்பி டாவிட்டால் என்ன? மதியம் சீக்கிரமா சாப்பிட்டாப் போச்சு" என்று சொல்கிறவரா நீங்கள்? ஜாக்கிரதை. அடிக்கடி காலையில் சாப்பிடாமல் இருப்பவர்கள் பிற்காலத்தில் குண்டாகி விடுகிறார்கள் என்கிறது அண்மைய ஆய்வு.

300இற்கும் மேற்பட்டவர்களிடம் 12 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வில், யாரெல்லாம் ஒழுங் காகக் காலை உணவைச் சாப்பிடவில்லையோ, அவர்க ளெல்லாம் அதிக எடை, அதிக இடுப்பளவோடு இருந்தார் களாம். குறிப்பாக, "காலை உணவு சாப்பிடும் பழக்கமே இல்லை" என்று சொல்பவர்களுக்கு உடல் பருமன் பிரச்சினை மிக அதிகமாக இருந்ததாம். 'காலையில் சாப்பிடும்போது நம் உடலின் வளர்சிதை மாற்றம் தூ ண்டப்படுகிறது. அதனால் நாள்முழுவதும் நாம் அதிக கலோரிகளை எரிக்கிறோம்' என்கிறார்கள் ஆய்வு நிபுணர்கள். 'சரிவிகித அளவில் சத்துகளைக் கொண்ட காலை உணவைச் சாப்பிடுவதன் மூலம் பின்னாள்களில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

வாரபலன்

மேடம்

வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்புகளை தேடு வீர்கள். வீடு, வாகனத்தில் பரா மரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் தனது தகுதி திறமைகளை வளர்த்திட உதவுவீர்கள். பூர்வ சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

ரிஷபம்

பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றுவீர்கள். புதியவர் களின் நட்பும் உதவியும் கிடைக் கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். புதிய வீடு, வாகனம் திட்டமிட்டபடி வாங்கலாம். தொழிலில் வளர்ச்சி பெற கண்ணும் கருத்துமாக பணிபுரிவீர்கள்.

மிதுனம்

எவரிடமும் நிதானித்து பேசுவதால் சிரமம் அனுகாமல் தவிர்க்கலாம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதலை தயக்கமுடன் ஏற்றுக் கொள்வர். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாக்கவும்.

கடகம்

அதிர்ஷ்டகரமான பலன் உண்டாகும். சமூக நிகழ்வு மனதில் நம்பிக்கையை உருவாக் கும். பேச்சு இனிதாக அமைந்து வசீகரமாகும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகள் புதிய விஷ யங்களை அறிந்து கொள்ள உதவுவீர்கள்.

சிம்மம்

திட்டமிட்ட பணிகளை உத்வேகமுடன் துவங்குவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணம் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும். செலவில் தாராளம் இருக்கும். எதிர்ப்பாளரால் வருகின்ற கெடுசெயல் பலமிழக்கும்.

கன்னி

இனிய நிகழ்வுகள் உருவாகி சந்தோஷம் கூடும். செயல் களில் அறிவாற்றல் அதிகரிக் கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் செழித்து அதிக லாபம் கிடைக்கும்.

துலாம்

முக்கியமான பணிகள் புதிய அணுகுமுறையால் நிறை வேறும். உறவினர்கள் அதிக பாசம் கொள்வர். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளை கள் மனதில் நல்ல சிந்தனை வளரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வாழ்வின் முன்னேற்றம் கண்டு எதிரிகள் விலகுவர்.

விருச்சிகம்

மனதில் மகிழ்ச்சியும் உற்சாக மும் கூடும். செயல்கள் முழு அளவில் வெற்றியாகும். நல்ல குணத்தால் உறவினர், நண்பர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். ஏழைக்கு உதவும் அறப்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

தனுசு

குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். உடன்பிறந்த வர்கள் சொந்த பணிகளில் கவனம் கொள்வர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். பிள்ளைகளின் செயல்திறன் வளர இயன்ற அளவில் உதவுங்கள். நேரத்திற்கு உணவு உண்பதால் ஆரோக்கியத்தை பாதுகாக்கலாம்.

மகரம்

சுற்றத்தாரின் அன்பு ஆதரவி னால் மனம் நெகிழ்வீர்கள். புதிய வாகனம் வாங்குகின்ற முயற்சி நிறைவேறும். தாய்வழி உறவினர் விரும்பி சொந்தம் பாராட்டுவர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். பிள்ளைகள் பெற்றோரின் வார்த்தையை ஏற்று நடந்து கொள்வர்.

கும்பம்

எந்தச் செயலையும் பரிசீலனை செய்து தொடங்கு வீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். வழக்கு விவகாரத்தில் சுமுக அணுகுமுறையால் நல்ல தீர்வு பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம்பெறும்.

மீனம்

லட்சியம் நிறைவேற்ற மன உறுதியுடன் பணிபுரிவீர்கள். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். புதிய வீடு,வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. . சமயோசித அணுகுமுறையால் எதிர்ப்பாளர் திகைப்படைவர். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பைப் பின்பற்றவும்.

தேசிய ரீதியிலான மேசைப் பந்தாட்டப் போட்டி யில் கிளிநொச்சி மாணவி தனுசிகா பாலகிருஸ்ணன் மீண்டும் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றார்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஞானசூரிய சதுக்கம் பகுதியில் உள்ள வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் மட்டக்களப்பு - மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் எம்.தயாபரன் முன்னிலையில் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை நாவிதன் வெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 15ஆம் கிராமத்தைச் சேர்ந்த மாணவன் முருகமூர்த்தி கிருஷாந் க.பொ.த உயர் தரத்தில் மாவட்ட ரீதியில் 13ஆம் இடத்தைப் பெற்று பிரதேசத்தில் வைத்தியத்துறைக்குத் தெரிவான முதல் மாணவன் என்ற பெருமையைப் பெற்டறுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரில் பொது மக்களின் நன்மை கருதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட பாரிய சோதனை நடவடிக்கைக ளினால் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்ட மூன்று உணவு விடுதிகள் மூடப்பட்டன. பாவனைக்கு உதவாத பெருமளவு உணவுப்பொருள்களும் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு - கோரளைப்பற்று ராணமடு பகுதியில் மண் அகழ்வு நடவடிக்கைக்கு எதிராக மக்கள் வீதியினை மறித்துப் போராட்ட மொன்றை நடத்தியுள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்க வாசகம் அவர்களின் கால அதிர்வுகள் நூல் வெளியீட்டுவிழா அண்மையில் வவுனியா வாடிவீடு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

ஆசை

வகுப்பில் முதல் மாணவனாகவும் ஒழுக்கமானவனாகவும் விளங்கிய மணிவண்ணனை உற்சாகப்படுத்த விரும்பினார் அவன் மாமா.

"நீ படித்து பெரியவனாகி என்ன வேலைக்குப் போவாய்" என்று கேட்டார் அவர்.

"நான் படித்து மாவட்ட அரசாங்க அதிபராக வருவேன்" என்றான் மணிவண்ணன்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அப்பா "தம்பி விரலுக்கேற்ற வீக்கம் வேண்டும். நீ ஒரு சாதாரண தோட்டக்காரனின் மகன். நீ ஆசைப்படுவதில் அளவு வேண்டும்" என்றார்.

மணிவண்ணனின் சந்தோஷம் மணலில் பாய்ந்த தண்ணீராய் மறைந்து போனது.

"ஒரு ஏழையின் மகன் மாவட்ட அரச அதிபராக வர ஆசைப்படுவது பேராசையா?" என்று நினைத்தான். அன்று வகுப்பில் மணிவண்ணன் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தான்.

பாடங்களில் அவன் மனம் லயிக்கவில்லை. வகுப்பு ஆசிரியர் அவனை கவனித்து விட்டார். ஆசிரியர் அவனை தனியாக அழைத்து விசாரித்தார்.

"ஒரு ஏழையின் மகன் மாவட்ட அரசாங்க அதிபராக ஆக ஆசைப்படுவது பேராசையா" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் ஆசிரியர் கலகலவென்று சிரித்தார். "இதற்கு நானே உனக்கு நல்ல பதிலைச் சொல்லுவேன். ஆனாலும் இன்று மாலை வரை காத்திரு. எது பேராசை என்று புரிந்து கொள்வாய்" என்றார்.

அன்று மாலை பள்ளியின ஆண்டு விழா நடைபெற்றது. ஆண்டு விழாவில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமை தாங்கினார். அவர் பேசும் போது மாணவர்கள் நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் உட்கார்ந்திருந்த மணிவண்ணனிடம் வந்த ஆசிரியர், "உன் சந்தேகத்தை அவரிடமே கேள்" என்றார்.

முதலில் தயங்கிய மணிவண்ணன் தைரியமாக எழுந்து கலக்டரிடம்

"ஒரு ஏழை தோட்டக்காரனின் மகன் மாவட்ட அரச அதிபராக வர ஆசைப்படுவது பேராசையா?" என்று கேட்டான்.

"நிச்சயமாக இல்லை. நேர்மையான வழியில் பெறுவதாய் இருந்தால் உலகத்தைக் கூட வாங்க ஆசைப்படுவதில் தவறு இல்லை" என்று பளிச்சென்று கூறினார் அந்த மாவட்ட அரசாங்க அதிபர்.

"நானும் ஒரு சாதாரண ஏழை விவசாயியின் மகன் தான். உழைப்பும் உறுதியான முயற்சியும் இருந்தால் எதற்கும் ஆசைப்படலாம். அது பேராசை ஆகாது" என்று பேசி முடித்தார் அந்த மாவட்ட அரசாங்க அதிபர்.

இருபது ஆண்டுகள் கழிந்தன.

அதே பள்ளி ஆண்டு விழாவில் அப்போது மாவட்ட அரசாங்க அதிபராகப் புதியதாய் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிபர் மணிவண்ணன் பேசிக் கொண்டிருந்தார்.

"நம்பிக்கையும் உறுதியான முயற்சியும் உழைப்பும் இருந்தால் மாவட்ட அரசாங்க அதிபராக மட்டுமல்ல. இந்த நாட்டின் ஜனாதிபதியாகவும் வர ஆசைப்படுவது கூட பேராசை ஆகாது" என்று அரசாங்க அதிபர் மணிவண்ணன் சொன்ன போது மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

இருந்த பழமொழியும் திரிந்த பழமொழியும்

திரிந்தது

1) அடியாத மாடு படியாது

இருந்தது

அடியாத மாடு (கீழ்) படியாது

திரிந்தது

2) தடியெடுத்தவன் தண்டக்காரன்.

இருந்தது

தடி எடுத்தவன் தண்டல் காரன்.

குறள் ஒன்று விளக்கம் இரண்டு

குறள் 331:

நில்லாத வற்றை நிலையின என்றுணரும் புல்லறி வாண்மை கடை.

கலைஞர் மு.கருணாநிதி உரை:

நிலையற்றவைகளை நிலையானவை என நம்புகின்ற அறியாமை மிக இழிவானதாகும்.

மு.வரதராசனார் உரை:

நிலையில்லாதவை களை நிலையானவை என்று மயங்கி உணரும் புல்லறிவு உடையவராக இருத்தல் வாழ்க்கையில் இழிந்த நிலையாகும்.

அறிவோம் தெளிவோம்

01. உலக அமைதிக்கான நோபல் பரிசு யாரால் சிபாரிசு செய்யப்படுகிறது ?
நோர்வே அரசு

02. "கருடா' என்ற பெயர் கொண்ட விமானசேவை எந்த நாட்டில் இருந்து இயங்குகிறது ?
இந்தோனேஷியா

03. வெங்காயத்தில் அதிகமுள்ள விற்றமின் எது ?
விற்றமின் 'பி'

04. மனிதனைப்போல் தலையில் வழுக்கை விழுவது ஆண் குரங்குக்கா, பெண் குரங்குக்கா?
ஆண் குரங்குக்கு

05. முதல் மோட்டார் ரோட்றோலர் எந்த நாட்டில் தயாரிக்கப்பட்டது?
இங்கிலாந்து

06. 'செலினியம் செல்' என்ற போட்டோ முறையை கண்டு பிடித்தவர் யார் ?
எர்னஸ்ட் வெர்னர்

07. உயிரியல் கவிஞர் என்றழைக்கப்படுபவர் யார் ?
சேர் ஜெகதீஸ் சந்திர போஸ்.

08. தபால் தலையில் முதலில் இடம்பெற்ற இந்தியர் யார் ?
மகாத்மா காந்தி.

09 உலகின் முதல் செயற்கைகோளின் பெயர் என்ன?
ஸ்புட்னிக் - 1.

10. அலைபேசிகளில் காணப்படும் SOS என்பதன் விரிவாக்கம் என்ன?
Save Our Soul.

மைனா

மைனா ஸ்டார்லிங் (ஸ்ட்டேண்டிடே) குடும்பத்து பறவையாகும். பசரீன் பறவைகள் குழுவைச் சேர்ந்த இவை, இயற்கையாகக் கிழக்காசியாவில் மட்டுமே வாழ்கின்றன, எனினும் இவற்றின் பல வகைகள், வட அமெரிக்காவிலும், சாதாரண மைனா தென்கிழக்கு அவுஸ்திரேலியாவிலும் காணப்படுகின்றன.

மைனாக்கள் வலுவான பாதங்களைக் கொண்ட, நடுத்தர அளவிலான பசரீன்களாகும். இவற்றின் பறப்பு வலுவானதும் நேரானதுமாகும். இவை கூட்டமாக வாழ்வன. இவை விரும்பும் வாழிடம் ஓரளவு திறந்த வெளிகளாகும். இவை பூச்சிகளையும், பழங்களையும் உண்ணுகின்றன. பல வகைகள் மனித வாழிடங்களுக்கருகில் வசிப்பதுடன், எல்லாவகை உணவுகளையும் உண்ணக்கூடியன.

உடல் நிறம் பொதுவாகக் கடுமையானது, அதிகம் மண்ணிறம். சில வகைகள் மஞ்சள் நிறத்திலான தலை அலங்காரங்களைக் கொண்டுள்ளன.பெரும்பாலான வகைகள் பொந்துகளிலேயே கூடு கட்டுகின்றன.

தென்னாசியாவில் ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியா, இலங்கை வரையான நாடுகளில் காணப்படும் மைனாவை இந்திய மைனா எனவும் அழைக்கின்றனர். இது மனிதக் குரலில் கதைக்க வல்லதாகையால் பேசும் மைனா எனவும் அழக்கப்படுகிறது. இது 25 சென்றிமீட்டர் நீளமான பறவையாகும்.



அனுமன் அருளால் அல்லல் நீக்குவோம்

அஞ்சனையின் மைந்தன் என்பதால் ஆஞ்சநேயர். வாயுவின் அருளால் பிறந்தவர் என்பதால் மாருதி - வாயு புத்திரன் ஆகிய பெயர்களைப் பெற்ற அனுமன், புராணங்கள் சிறப்பிப்பதுபோல் ருத்ராம்சமாக திருஅவதாரம் செய்த திருநாள் - மார்கழி மூலம். சம்பசாதனன் எனும் அசுரனை அழித்த வானர வீரனான வீரகேசரியே அனுமனின் தந்தை. வீரகேசரி - அஞ்சனை தம்பதிக்கு வெகுகாலமாகக் குழந்தை வரம் இல்லை. ஆதலால், அதுகுறித்து இறை வழிபாடு செய்தனர். ஒருநாள் ஓர் அசரீரி ஒலித்தது. அதன் வழிகாட்டுதல்படி அருகிலுள்ள சூதக மரத்தை வழிபட்டு, அதிலிருந்து கிடைத்த கனியை அஞ்சனை சாப்பிட, அதன் பலனாக வாயுபகவானின் அருளால் அனுமன் பிறந்தார்.

சிறு வயதில் சூரியனைப் பழம் என்று கருதி அதைப் பறித்துத் தின்ன ஆசைப்பட்டு ஆகாயத்தில் உயர்ந்து பறந்தார் அனுமன். அப்போது, இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாடையில் தாக்கப்பட்டார். இதனால் வாயுதேவன் கோபம்கொண்டு ஈரேழு உலகங்களிலும் காற்றே இல்லாமல் செய்துவிட்டார். தேவர்கள் அவரிடம் மன்னிப்பு வேண்டி விமோசனம் பெற்றனர். மட்டுமின்றி அனுமனை வாழ்த்தி சிரஞ்சீவியாக வாழும் வரத்தையும் அளித்தனர். மேலும், கற்பக விருட்சத்தின் பொற்றாமரை மாலையையும் அவருக்குப் பரிசளித்த இந்திரன், 'அனுமனை வணங்குபவர்களுக்குக் கற்பக விருட்சத்துக்கு ஒப்பான ஐஸ்வர்யம் கிடைக்கும்' என்றும் வரம் அளித்தான்.

'அனு' என்றால் தாடை, தாடையில் தாக்கப்பட்டதால் அனுமன் என்ற திருப்பெயர் அவருக்குக் கிடைத்தது. அனுமனின் குறும்புகளால் பாதிக்கப்பட்ட ரிஷிகள் சிலர், 'உன் பலம் என்னவென்று உனக்கே தெரியாமல் போகட்டும்' என்று சபித்துவிட்டனர். பின்னர், அஞ்சனை வந்து வேண்டிக்கொள்ள, 'மூன்றாவது நபர் ஒருவர் மூலம் தன் பலத்தை உணர்வான்' என்று விமோசனம் அளித்தனர். பிற்காலத்தில் ஜாம்பவான் மூலம் தனது பலத்தை அறிந்த அனுமன், சமுத்திரத்தைத் தாண்டிய திருக்கதை நாமறிந்ததே.

தசரத மாமன்னர் புத்திர காமேஷ்டி யாகம் நடத்தி, யாகத் தீயிலிருந்து தெய்வீகப் பிரசாதத்தைப் பெற்றார். அதை, தம்முடைய மூன்று மனைவியரையும் அருந்தச் செய்து, பிள்ளை வரம் பெற்றார். அந்தப் பிரசாதம் சற்றே மீதம் இருக்க, அதை வாயு தேவன் அஞ்சனையிடம் வழங்கி அவளுக்குப் புத்திர பாக்கியம் அருளினார் என்றும், அவ்வாறு அவதரித்த மைந்தனே அனுமன் என்றும், இதனால் அனுமன் ராமபிரானின் சகோதரன் என்றும் சமர்த்த ராமதாசர் எழுதிய 'தாசபேதம்' என்ற நூல் கூறுகிறது. ஆனால் இந்தத் தகவல் வால்மீகி, கம்ப ராமாயணம் உள்ளிட்ட எந்த ராம காதையிலும் இல்லை.

அன்பு, வீரம், தியாகம், பக்தி, விவேகம், தொண்டு, காரிய ஸித்தி ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த தெய்வ வடிவம் அனுமன். அவரை வழிபட்டு அல்லல்கள் நீங்கப் பெறுவோம்

மாயமாக மறைந்த துன்பங்கள்

ஒருநாள் இயேசு கிறிஸ்து நைன் என்ற நகருக்கு வந்தார். அப்போது அங்கு ஒரு இறுதிச் சடங்கு நடப்பதைக் கண்டார். பிணம் அருகே ஒரு பெண் அழுது கொண்டிருப்பதைக் கண்ட இயேசு, அந்தப் பெண்ணை அழைத்தார்.

"அழாதே, உன்னுடைய பிரச்சினை என்ன? அதைச் சொல்" என்றார் இயேசு.

"நான் ஒரு விதவை. தற்போது என்னுடைய ஒரே மகனும் இறந்து விட்டான்" என்று கூறித் தேம்பித் தேம்பி அழுது புலம்பினார் அந்தப் பெண்.

"கவலைப்படாதே" என்று அந்தப் பெண்ணைத் தேற்றிய இயேசு, பிணம் அருகே சென்றார்.

"இளைஞனே, நீ எழுந்து வா" என்றார் இயேசு. அடுத்த விநாடியே பிணமாகக் கிடந்த இளைஞன் உயிர்த்தெழுந்தான். ஆமாம், அவனுக்கு மீண்டும் உயிர் வந்து விட்டது. இயேசு கிறிஸ்து சாவில் இருந்து அந்த இளைஞனை மீட்டுவிட்டார்.

இந்த அற்புதத்தைக் கண்ட இயேசுவின் சீடர்கள், "இதுபோன்ற ஒரு அற்புதத்தை இதற்கு முன்பு நாங்கள் கண்டதில்லை" என்று சிலிர்த்தார்கள்.

அப்போது இயேசு கிறிஸ்து, "நீங்கள் உண்மையாக இருந்தால், இதுபோன்ற அற்புதங்களை நிகழ்த்தலாம்" என்றார்.

இயேசு கிறிஸ்துவின் அற்புதத்தை அறிந்த நோய் வாய்ப்பட்டவர்கள், கெட்ட ஆவியால் பாதிக்கப்பட்டவர்கள், ஏழை எளியவர்கள் அவரைத் தேடி அலையலையாக வந்தனர். அவர்களை ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் துன்பங்களை இயேசு கிறிஸ்து போக்கினார்.

அப்படி வந்த மக்களிடம், "பகைவர்களிடம் அன்பு காட்டுங்கள்" என்ற போதனைகளையும் வழங்க இயேசு கிறிஸ்து தவறவில்லை. இயேசு கிறிஸ்து இதுபோன்ற அற்புதங்கள் நிகழ்த்தப் பகைவர்களையும், பாவம் செய்தவர்களையும் அவர் இரட்சித்ததே காரணம்.



சொல்லும் செயலும்!



சொல்லால் ஓரளவுதான் வெற்றி பெறலாம். ஆனால், செயலால் முழு வெற்றியும் பெற்றிட முடியும். நாம் சொன்ன சொல்லை மறந்துவிடலாம். ஆனால் நமது செயல் பிற்காலங்களில் நின்று மிளிரும். எனவே நாம் எந்த செயலைச் செய்தாலும் முறையாக - தவறின்றிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவரே உண்மையான முஸ்லிம்.

இறைவன் தேவைகளற்றவன் தனக்காக செலவு செய்வதை அவன் ஏற்றுக்கொள்வதில்லை. முதலில் தாய், தந்தை, சகோதர-சகோதரிகள், உற்றார்-உறவினர், தேவையுள்ளோர், அநாதைகள், வழிப்போக்கர்கள் என்றுதான் இறைவன் வரிசைப்படுத்துகிறானே தவிர, தனக்காகச் செலவிட வேண்டும் என ஒருபோதும் சொன்னதில்லை. எனவே முஸ்லிம்களின் அடையாளம் கடுமையான, இறை நம்பிக்கை மட்டுமே.

அல்குர்ஆனையும், நபிகள் நாயகத்தின் சொல்லையும்-செயலையும் பின்பற்றுகிறோம் எனச் சொல்லிக்கொண்டு அதற்கு எதிராக வாழ்வை அமைத்துக் கொள்பவர்கள் உண்மையான முஸ்லிம்கள் அல்லர். நபிகளாரின் திருமணங்கள் வெறும் பேரீச்சம் பழங்களை மட்டுமே உணவாக வைத்து நடைபெற்றன. ஆனால், இக்காலத் திருமணங்கள் ஆயிரம் பேருக்கு விருந்து, 100 பவுண்கள், சீர் பொருட்கள் எனச் சீர்கெட்டுக் காணப்படுகின்றன.

நபிகளின் சொல்- செயல்படி எளிய வாழ்க்கை மற்றும் சகோதரத்துவ ஒற்றுமைகள் ஆகியவற்றை எக்காலத்திலும் முஸ்லிம்கள் மறக்கக் கூடாது.

கப்டன் லோலோ ஈரநினைவாய்...!

■—— சாந்தி நேசக்

நெடிய தோற்றம். தேவையின்றிக் கதைக்காத சுபாவம். ஆனால் விழிகள் எப்போதும் ஆக்கிரமிப்பாளனின் நடமாட்டத்தை அவதானித்தபடியிருக்கும். கழுத்தில் சயனைட்டோடு ஒரு சிலுவை அவன் கழுத்தில் எப்போதுமே இருந்தது. குப்பிளான் கேணியடியிலிருக்கும் எங்கள் கடைக்கு அடிக்கடி வருவான். தன் தோழர்களுக்கு உணவுப் பொருட்கள் வாங்குவான். வயாவிளானில் 'சென்றி" இருக்கும் போராளிகளுக்கு அம்மாவிடம் பாணும் சம்பலும் வாங்கிக் கொண்டு போவான். சிலசமயம் ஏதாவது கிறுக்கு வேலை செய்து அம்மாவிடம் ஏச்சும் வாங்குவான். என்னுடன் ஏதாவது கொழுவுவான்.

வைரமுத்து வளவுப் பனங்கள்ளை அடித்தபடி 'இஞ்சை வாடாப்பா என்ன வந்தவுடனை ஓடுறாய்!" எனப் பிடிக்கும் அப்பாவுடன் வந்திருந்து அரசியல் பேசுவான்.

'என்ன சடாண்ணை சனம் கதைக்குது?" சனத்தின் போராட்டம் பற்றிய அபிப்பிராயங்களைக் கேட்பான்.

'குடியைக் கொஞ்சம் குறையுங்கோ சடாண்ணை பிள்ளையள் வளர்ந்திட்டாளவை" ஆலோசனை சொல்வான். அதற்குப் பதிலாக அப்பா வசந்தமாளிகை வசனம் பேசிக் காட்டுவார். சேர்ந்து தானும் வசந்தமாளிகை வசனம் பேசி எல்லோரையும் சிரிக்க வைப்பான். இப்படித்தான் லோலோ எங்களிடையே உலவித்திரிந்தான்.

சிங்களப் படைகளை எங்கள் ஊர்களில் ஊழிக்கூத்தாடவிடாது காத்த பெருமை எங்கள் லோலோவுக்கும் உண்டு. 1987ஆடி 5 இன் எதிரொலி சிங்களத்துடான போர் ஓய வந்த ஒப்பந்தம் எங்களது வாழ்வில் ஒளி வருகிறது என்றுதான் எண்ணியிருந்தது எங்கள் தேசம். வாழைக்கன்று நட்டுத் தோரணம் கட்டிப் பன்னீர் தெளித்து இளநீர் கொடுத்து இந்தியப் படைகளை வரவேற்றது எங்கள் தேசம். பெரும் அவலம் நிகழப்போகிறது என்பதனை யாருமே எண்ணியிருக்காத அந்த நாள் 1987 ஒக்ரோபர் 10 அந்தப் பொழுது விடியாமலேயே இருந்திருக்கலாம்.

இந்திய வல்லாதிக்க அரசின் போர் டாங்கிகள் ஊர்களை உழுது கொண்டு போரில் குதித்தது. இருந்த நம்பிக்கை இழையறுந்து போக ஊர்களெங்கும் வல்லாதிக்கப் பேய்களின் ஊழித்தாண்டவம். யாரை? எங்கே ? எப்போது? சாவு காவுகொள்ளும் என்பதை ஆரூடம் சொல்ல முடியாது. அடுத்த நொடியே என்னுயிரும் இடுங்கப்பாடலாம்... வீட்டில் அது நிகழலாம், வீதியில் அது நிகழலாம், இரவில் அது நிகழலாம், பகலில் அது நிகழலாம், எப்போ வேண்டுமானாலும் அது யாருக்கும் நிகழலாம். ஆம்...! சாவின் விளிம்பில்தான் எங்களது நாழிகள் ஓடிக்கொண்டிருந்தன.

புன்னாலைக்கட்டுவன் பெற்றெடுத்த புதல்வன் கப்டன் லோலோ. இந்தியப் படைகளின் கனவையும் கலங்கடித்து அவர்களைச் சிதைத்துக் கொண்டிருந்தான். 'லோலோ" பெயரைக் கேட்டாலே போதும் இந்தியப் படைகளின் துப்பாக்கிகள் அவனைத் தேடத்தொடங்கி விடும். ஆனால் வல்லரசின் கண்ணில் மண்தூவி அவர்கள் முன்னாலேயே போய் நிற்பான். 'லோலோவைத் தெரியுமா?" அவனிடமே கேட்பார்கள்.

'கண்டால் கட்டாயம் லோவைக் காட்டித் தாறன்" சொல்லிவிட்டுச் சாதாரணமாய் அவர்கள் கண்களுக்குள்ளேயே உலவித்திரிந்த தீ அவன்.

குப்பிழான், ஏழாலை, மல்லாகம், சுன்னாகம் என ஒவ்வொரு இந்தியப் படை முகாம் வாசலிலும் விசாரணைகள் நடக்கும். இளையவர் முதியவர் பேதமின்றிப் பிடித்து அடிவிழும் 'லோலோ எங்கே?"

நாங்களும் இடம்பெயர்ந்து கேணி யடியை விட்டு சமாதி கோவிலடியில் போயிருந்தோம். அப்போதும் லோலோ இடையிடையே ஒளித்து ஒளித்து எங்கள் வீட்டுக்கு வருவான். அப்பாவுடன் ஏதோ தனியக் கதைப்பான். அம்மாவுடனும் கதைப்பான். அதிக நேரம் மினக்கெட மாட்டான். போய்விடுவான். பின்னேரங் களில் அப்பா குப்பிளான் சந்திப்பக்கம் போய் கொஞ்சம் இருட்டத்தான் திரும்பி வருவார். மீண்டும் காலை 5-30 இற்கு விடிய சுன்னாகம் யூனியனுக்குப் போவார். பின் அப்படியே வேலைக்குப் பெரிய சங்கக்கடைக்குப் போய் வருவார்.

இப்படியிருக்க கேணியடிக் குடும்பங்கள் மீண்டும் தங்கள் வீடுகளில் குடியிருக்கப் போய்விட நாமும் எங்கள் கடைக்குப் போய்விட்டோம். எங்கள் கடைக்குப் பக்கத்தில் இருக்கும் வைரமுத்துவின் புளியங்கூடலுக்குள் கொங்கிறீட் கற்கள் அடுக்கி சென்றி அமைத்திருந்தன பேய்கள். தினமும் காலை அல்லது விடியப்பறம் அல்லது இரவில் வந்து அந்தச் சென்றிக் கூட்டில் இருப்பார்கள். விடியக் கடைக்குப் பாண் கொண்டு வரும் கொத்தலாவலவுக்கும் விசாரணை நடக்கும்.

போகின்ற வருகின்றவர்களைப் பிடித்து விசாரணை நடக்கும் - அடி நடக்கும். ஒசிச் சிகரெட்டுக்கு அம்மாவிடம் வருவார்கள். அம்மா குடுக்கமாட்டா.

'சுட்டுப் போடுவம்" அம்மாவின் நெற்றியை துப்பாக்கி குறிவைக்கும்.

'சுடடா..." அம்மா துணிவாய் நிற்பா. நானும் தங்கைமாரும் அழுவோம் 'அம்மாவைச் சுடாதையுங்கோ..."

அம்மாவைக் கெஞ்சுவோம் 'குடுங்கோம்மா போகட்டும்" சின்னத்தம்பி எதுவும் புரியாது முழிப்பான்.

'பேசாமலிருங்கோடி இடம்விட்டா உவங்கள் மடங்கட்டிப் போடுவங்கள்" பயத்தில் எங்கள் விழிகள் மிரளும்.

'வா தங்கச்சி சிகரெட் எடுத்துத் தா வா... வா..." எங்களைக் கூப்பிடுவான் இந்தியச் சிப்பாய்.

அம்மாவைப் பார்ப்பேன். என்னை நோக்கித் துப்பாக்கி நீளும். 'பேசாமல் நில். பாப்பம் அவன் சுடட்டும்" சொல்வா அம்மா. எனக்குக் கை,கால்கள் உதறல் எடுக்கும். அம்மாவிடம் ஒசிச் சிகரெட் கிடைக்காது தமது மொழியில் பேசிக்கொண்டு போவார்கள். இது தினமாகி விட்டது எமக்கு. அமைதி காக்க வந்த இலட்சணம் இப்படித்தான் இருந்தது. அப்போது அவர்களால் லோலோ தேடப்படத் தொடங்குகிறான். லோலோவைத் தெரியுமா? தெரியாது என்பவர்களுக்கு அடியும் - உதையும் நடக்கும். தெரியும் என்றால் ஏன் காட்டித் தரவில்லை என்று நடக்கும். லோலோ அவர்களின் கனவிலும் நினைவிலும் கலக்கிக் கொண்டிருந்தான். லோலோவைப் பிடித்தால் அப்படியே விழுங்கிவிடும் கொதியில் திரிந்தார்கள்.

ஒருநாள் மாலை கனநாட்களுக்குப் பிறகு எங்கள் வீட்டுப் பின் ஒழுங்கையால் வந்து அம்மாவைக் கூப்பிட்டான் லோலோ. முன்பக்கம் முழுவதும் இந்தியப் படைகள் காவல் நின்றன. ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது என்பதை அவர்களின் ஓட்டமும் கொதிப்பும் விளக்கியது. அம்மா மெதுவாகப் பின்பக்கம் போனா. 'என்ன மாதிரியக்கா நிலைமையள்..."

'விடியவில இருந்து மாறிமாறி ஓடித் திரியிறாங்கள் கெதியாப்போ" அவசரப்படுத்தினா அம்மா. அப்போது 'தயிலங்கடவைத் தோட்ட வெளியுக்கை அவங்களுக்கும் எங்களுக்கும் சண்டை நடந்தது. சண்டை முடிஞ்ச பிறகு போட்டாங்களோ எண்டு பாக்கப் போன வினோதனைச் சுட்டுப் போட்டாங்களக்கா" அப்போதுதான் புரிந்தது. அவர்கள் ஏன் திரிகிறார்கள் என்பது. 'திரும்பி வருவன் நிலைமையளைப் பாருங்கோ..."சொல்லி விட்டுப் போனான் லோலோ. பின் கேள்விப்பட்டோம் வினோதனை அவர்கள் வடக்குப் புன்னாலைக்கட்டுவன் முகாமுக்கு எடுத்துப்போய் விட்டார்களாம். வினோதன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளன். வீட்டிற்கு ஒரே ஒரு ஆண் வாரிசு. அவன் அம்மா கனகமக்காவின் உயிரே அவன்தான். அக்காமாரின் செல்லப்பிள்ளையும் ஆசைத்தம்பியும் அவன்தான். மொத்தத்தில் அவன்தான் அவர்களுக்கு எல்லாமே. அந்தப் பிள்ளையின் உயிரைப் பிடுங்கிவிட்டன இந்தியப் பேய்கள். நாளை விடியவிருக்கும் பொழுது வினோதனின் இளவைக் கொண்டாடக் காத்திருந்தது.

பொழுது விடிய ஊர் வினோதனின் சாவைப் பற்றித்தான் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. பகல் 10 மணிபோல் ராசரப்பு வந்து சொன்னார். வினோதனின் உடலை அவன் அம்மாவும் அக்காமாரும் இந்தியப் படைகளிடம் போய் வாங்கி வந்து வீட்டில் செத்த வீடு நடப்பதாக மூன்று மணித்தியாலத்துள் எல்லாம் முடித்துவிட வேண்டுமாம் என்றும் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள்.

வினோதனின் வீட்டைச்சுற்றி ஒரே இந்தியப் பட்டாளங்கள்தான். லோலோ அங்கு வருவான் என்று காத்திருந்தனர்.

வடக்குப் புன்னாலைக் கட்டுவன் ராஜேஸ்வரிய கோவிலடியி வினோதனின் அங்கிருந்து தி எங்கள் கடை சீனி வாங்க, வாங்க, நெரு பெட்டி வாங் வினோதன் வ அமைதியே வினோதன், யாருடனும் அலட்டாத வினோதன், கனகமக்காவி இனி வரமாட் அவனை மெ

பயந்து பய சாவுக்குப் போ வந்தா. வந்து மனிசியின்ர சுட்டுப் போ முடிந்து பல எங்கள் கடை செல்ல மகன் சொல்லி அ ஒவ்வொரு க தாங்கிய கா பிரசவங்களா

அடுத்து பொழுது. அ செவ்வரத்தை வைத்துச் சா நின்றார். வட இராணுவ அ கடைக்கு வந் எல்லோரை அன்று பிறந் விடயத்துக்கு தெரியுமா"

'இல்லை"

'அண்ண தெரியும் இ

மீண்டும்

'எங்க நீங் சத்தியம் ப வாறதில்லை

அப்பா ஓ தொட்டுச் சு அப்பாவுக்கு

'ஒருநாளைக் சுட்டுப்போ சர்மா போ

'செய்துபோ வடக்கத்தை

தினமும் இந்தியப் ப சுற்றிவளை வதை அன்ற வழமைபோ

நசக்கரம்

ப்
லைக்
ன்
வரியம்மன்
டியில்தான்
தனின் வீடு.
ந்து தினமும்
கடைக்கு
ங்க,' அரிசி
நெருப்புப்
வாங்கவென
தன் வருவான்.
யே உருவான
தன், அதிகம்
னும்
ாத
தன்,

க்காவின் செல்லப்பிள்ளை வினோதன்
ரமாட்டான். வல்லரசத் துப்பாக்கி
ை மௌனமாக்கி விட்டது.
து பயந்து சனங்கள் வினோதனின்
ப்போய் வந்தனர். அம்மாவும் போய்
வந்து சொன்னா 'பாவம் கனகமக்கா
ன்ன்ர சொத்தாயிருந்த பிள்ளையைச்
போட்டாங்கள்" வினோதனின் சாவு
பல நாட்களின் பிறகு கனகமக்கா
கடைக்கு வருவா தன் கடைக்குட்டிச்
மகன் வினோதனைச் சொல்லிச்
அழுவா. பாக்கப் பாவமா இருக்கும்.
ரு காலையும் ஏதோ ஒரு சோகம்
காலைகளே எங்கள் மண்ணின்
ங்களாயிருந்தது.
த்து வந்தவொரு காலைப்
து. அப்பா ஆறுப்பிள்ளை வளவுச்
ரத்தையில் பிடுங்கி வந்த பூக்களை
ச் சாமி கும்பிட்டுக் கொண்டு
. வடக்குப் புன்னாலைக்கட்டுவன்
வ அதிகாரி சர்மா எங்கள்
கு வந்தான். அம்மா, அப்பா, எங்கள்
ரையும் கூப்பிட்டான். தனக்கு
பிறந்தநாள் என்றான். சற்று நேரத்தில்
துக்கு வந்தான். 'லோலோவைத்
மா"
லை" என்றார் அப்பா.
ண்ண பொய் சொல்லாதீங்க எனக்குத்
ம் இஞ்சை லோலோ வாறது."
டும் அப்பா 'இல்லை" என்றார்.
நீங்க வணங்கிற சாமி மேலை
ம் பண்ணுங்க பாப்பம் லோலோ
ல்லையெண்டு"
பா ஒவ்வொரு சாமியாகத் தொட்டுத்
ச் சத்தியம் பண்ணினார். சர்மா
வுக்குச் சொல்லிவிட்டுப் போனான்.
ளைக்கு லோலோவை நாங்க
போட்டு அப்ப வந்து சொல்லுவம்"
போனபின் அப்பா சொன்னார்
போட்டு வந்து சொல்லடா
த்தையா"
மும் லோலோவைத் தேடும்
ப் படைகள் ஒவ்வொரு ஊராகச்
ளைப்பு, சோதனை, அடி, உதை,
அன்றாடம். அந்தக் காலை
போல் விடிந்தது. ஆனால் பெரும்

சோகம் எங்களுக்காகக் காத்திருந்ததை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. ஊர் தன் அலுவலில் மூழ்கிக் கிடந்தது. இந்தியப் படைகள் திடும் திடுமென வந்தார்கள். சிரிப்பும் அட்டகாசமும் பெரிதாக இருந்தது. ஒரு தமிழ்ச் சிப்பாய் கடைக்கு வந்து சொன்னான். 'உங்கடை லோலோவைச் சுட்டிட்டம்."

200 ரூபாய் பணநோட்டை அம்மாவிடம் நீட்டி முழுவதற்கும் சிகரெட் கேட்டான். அனேகமாக ஓசிச் சிகரெட்டுக்கு அலையும் ஜென்மங்கள் எங்கள் லோலோவை நாங்கள் இழந்திருக்க அதைச் சந்தோசமாகக் கொண்டாட சிகரெட் வாங்கிக் கொண்டு வடக்குப் புன்னாலைக்கட்டுவன் முகாம் நோக்கிப் போனார்கள். அவர்கள் போனபின் அம்மா கலங்கியிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டா. யூனியனுக்குப் போய் வந்த அப்பா சொன்னார் 'நேற்றிரவு அவர்களுடன் நடந்த நேரடி மோதலில் லோலோ வீரச்சாவாம்" அரைக்காற்சட்டையும், காதில்பூவும், நெற்றியில் விபூதியும் சந்தனமும், சேட்பொக்கற்றில் சிவப்பு, நீலநிறப் பேனாவுடனும், சைக்கிள் கரியலில் கொப்பியும் கொண்டு இடுப்பில் பிஸ்டலும் சேட் கொலருக்குள் சயனைட்டை மறைத்த - அவர்கள் முன்திரிந்த நெருப்பு தன் இனிய இன்னுயிரை தாய் மண்ணுக்கு ஈந்து 31.12.1988 அணைந்து போனது.

பேய்களுக்குப் பயந்து அந்தப் புனிதனின் புகழுடலைக்கூட நாம் காணவில்லை. காரணம் நாங்கள் அவர்களால் குதறப்படலாம் என்ற அச்சம்தான். அன்று இரவு அப்பா குப்பிளான் சந்திக்குப் போகவில்லை. வீட்டில் இருந்து அழுதார் 'என்ரை பிள்ளையைக் கொன்று போட்டாங்கள். உன்னைத் தெரியாதெண்டு அவங்களுக்குச் சத்தியமும் பண்ணினனான்." அவர்கள் மேலிருந்த கோபத்தை துர சணத்தால் அப்பா திட்டித்தீர்த்தார். அம்மா மௌனமாய் அழுதா. திரும்பி லோலோ வருவான் என்றிருந்தவர்கள் நம்பிக்கை வெறும் கனவாகவே போனது. அவன் வரவேயில்லை. கப்டன் லோலோவாய் எங்கள் மனங்களில் இன்றும் உலரா ஈரநினைவாய்...!

விருதும் புகழும்

ஆனந்த விகடன் ஆண்டுதோறும் "ரொப் 10 - மனிதர்கள்" எனப் 10 பேரைக் கண்டறிந்து அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நடத்தி வருகிறது. அந்த வகையில் இவ்வருடமும் அப்படி ஒரு பட்டியலை ஆனந்த விகடன் சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

இம்முறை அந்தத் தொடரில் முதலிடம் வழங்கப்பட்டது ஒரு தனி நபருக்கு அல்லாது மொத்தம் 13 பேர் அடங்கிய குழுக்கு வழங்கப்பட்டுள்ளது. வழமையாக தனிப்பட்டவரின் சாதனைகளைப் போற்றி அவரையே முதன்மைப்படுத்தும் ஆனந்த விகடன் இம்முறை ஒரு சம்பவத்தை இடம்பெறச் செய்து அதில் பாதிக்கப்பட்டவர்களை குழுவாக இடம்பெறச் செய்த வகையில் தம்மையும் தாம் சார்ந்த நிறுவனத்தையும் அவர்கள் பெருமைப்படுத்தியிருப்பதாகவே எண்ணலாம். இதனூடாக அடக்கப்பட்ட மக்களையும் அவர்கள் போராட்டத்தையும் வெளிக்கொண்டு வந்திருக்கிறது ஆனந்தவிகடன்.

"உப்புக்காற்று வீசும் பூமியில் உதிரம் சிந்தப்பட்டது, இந்த ஆண்டின் துயரம் மட்டுமல்ல, காலத்தால் அழிக்க முடியாத களங்கம் 2018, மே 22 - இந்த நாள், தமிழ் வரலாற்றில் இரத்தத்தால் சிவந்த கறுப்பு நாள். இத்தனைக்கும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்களும் சரி, தூத்துக்குடியில் போராடியவர்களும் சரி, கேட்டதெல்லாம் என்ன? சுவாசிக்க சுத்தமான காற்று, உயிர் வாழ்வதற்கான உத்தரவாதம்... அவ்வளவுதான்.

99 நாள்கள் வரை அமைதியாகத்தான் நடந்தது ஸ்டெர்லைட்டுக்கு எதிரான போராட்டம். நூறாவது நாள் போராட்டத்தில் வன்முறை வெடித்ததைக் காரணம் காட்டி, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. தங்கள் நிலத்தையும் கடலையும் காற்றையும் பாழ்படுத்தும் ஒரு நிறுவனத்தை மூடக்கோரி மக்கள் நடத்திய போராட்டத்தை, காவல்துறை 13 உயிர்களைக் குடித்து அடக்கியது. களத்தில் நின்றவர்கள், உத்வேகத்தில் போராடச் சென்றவர்கள், ஆர்வத்தில் உடன் சென்றவர்கள் என அடக்குமுறைக் குண்டுகளுக்கு இரையான 13 உயிர்களும் தூத்துக்குடியின் பிரச்சினையை உலகப் பிரச்சினையாகக் கொண்டு நிறுத்தினர்.

'தீவிரவாதிகள் பின்னால் இருந்து இயக்குகிறார்கள், சமூக விரோதிகள் ஊடுருவிவிட்டார்கள்' என்று பொலிஸும் அரசும் கூறியவை பொய்யில் நனைத்த வார்த்தைகள் என்பதற்கு உதாரணம், 17 வயது மாணவி ஸ்னோலின் மரணம். அவரோடு கார்த்திக், மணிராஜ், கந்தையா, தமிழரசன், ரஞ்சித்குமார், ஜெயராமன், செல்வ சேகர், காளியப்பன், சண்முகம், அந்தோணி செல்வராஜ், கிளாஸ்டன், ஜான்சி ஆகியோர் துப்பாக்கிச்சூட்டில் பலியானார்கள். அரசு வன்முறை அம்பலப்படுவதற்குக் காரணமான, வீரஞ்செறிந்த மக்கள் போராட்டத்துக்கு விதையான இந்தத் தியாகிகள், தமிழகம் மறந்துவிடக்கூடாத வரலாற்று நாயகர்கள் என ஆனந்த விகடன் குறிப்பிட்டிருக்கிறது.



2019 வாழ்வை வளமாக்கும் 10 நிதித் தீர்மானங்கள்

புத்தாண்டில் நாம் அனைவரும் ஒரு புதிய ஆரம்பத்துக்குத் தயாராகி விட்டோம். ஒவ்வொரு புத்தாண்டிலும் நாம் ஆரோக்கியமான, வளமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற விரும்புவோம். அதற்காக நிதி ஒழுக்கத்தை ஏற்றுக்கொள்வதுடன், நிதி ரீதியாக செழிப்புடன் இருக்க முதலீடுகளைச் செய்யவும் விரும்புவோம். ஒவ்வொரு ஆண்டும் நிதி தொடர்பான பல தீர்மானங்களை எடுத்தாலும், நம்மில் பெரும்பாலானோர் அவற்றைச் சரியாகப் பின்பற்றுவதில்லை என்பதே யதார்த்தம்.

தனிநபர் நிதித் திட்டமிடல் (Personal finance) நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் சிறப்பாகவும், வளமாகவும் இருக்க அவசிய தேவையாக உள்ளது. நாம் உறுதியான நிதித் தீர்மானங்களுடன் புத்தாண்டை ஆரம்பிக்கும்போது, நமது நிதி இலக்குகளை எளிதில் அடைய முடியும். அந்த நிதி இலக்குகள், ஓய்வுகால சேமிப்பை அதிகரிப்பதாகவோ அல்லது வீடு வாங்குவதற்கான முற்பணத்தை (Down payment) திரட்டுவதாகவோ அல்லது வருங்காலத்துக்கான நிதிப் பாதுகாப்புக்கான முதலீடாகவோ இருக்கலாம்.

கடந்த காலத்தில் புத்தாண்டு தீர்மானங்களை நாம் பின்பற்றாமல் இருந்திருக்கலாம். இனி இந்தப் புத்தாண்டிலிருந்தாவது புதிய நிதி இலக்குகளை வகுத்து, அவற்றை மிகுந்த கவனத்துடன் தொடர்வோம். பொருளாதார ரீதியாக வளமான வாழ்வை வாழவேண்டும் என நினைப்பவர்கள் இந்தப் புத்தாண்டு முதல் பின்பற்ற வேண்டிய 10 தீர்மானங்கள் இனி...

1. தனிப்பட்ட இலக்குகளை நிர்ணயுங்கள்

உங்கள் சொத்து மற்றும் பொறுப்புகளை (Liabilities) கணக்கெடுத்து, உங்களின் நிதி நிலையை ஆய்வு செய்யுங்கள். பணம் எப்படிச் செயற்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உதாரணத்துக்கு, கடனட்டை (Credit Card) மூலம் செலவு செய்வதைக் கட்டுப்படுத்துங்கள். இதனால் அதிக வட்டிக்கு நீங்கள் கடன் வாங்குவது குறையும். தேவையில்லாத பொருட்களை நீங்கள் வாங்குவதும் குறையும். இதனால் நீங்கள் சேமிக்கும் தொகை கணிசமாக அதிகரிக்கும். இந்தச் சேமிப்பு எதற்காக என்பதைத் திட்டமிடுங்கள். உதாரணமாக, பிள்ளைகளின் கல்வி, புதிய வீடு, கார் அல்லது உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலா செல்ல நீங்கள் திட்டமிட்டுப் பணம் சேர்க்கலாம்.

2. தேவையற்ற செலவுகளைக் குறையுங்கள்

தேவையில்லாத செலவுகளைக் குறைத்தால், நீங்கள் செலவு செய்யும் பணம் கணிசமாக மிச்சமாகும். நீங்கள் பணத்தைச் சேமிப்பது பணத்தைச் சம்பாதிப்பதற்குச் சமம் என்பதைப் புரிந்துகொண்டாலே போதும், தேவையற்ற செலவுகளைத் தானாகவே குறைக்கத் தொடங்கி விடுவீர்கள்.

3. பட்ஜெட் போடுங்கள்

புத்தாண்டு வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்க இதுவே சரியான நேரமாகும். நீங்கள் தயாரிக்கும் பட்ஜெட்டுக்குள் உங்கள் செலவுகள் இருந்தால், அது உங்கள் நிதி இலக்குகளை அடைவதை உறுதிப்படுத்தும். நினைத்த போதெல்லாம் பொருள்களை வாங்கிக் குவித்தால், உங்கள் வருமானத்தில் பெரும்பகுதி காணாமல் கடன் வாங்கி, பிரச்சினைகளில் சிக்க வேண்டி இருக்கும். நீங்கள் தயாரித்த பட்ஜெட் சரியாக இருக்கிறதா என்பதை ஒவ்வொரு மாதமும் சரி பார்த்து சில மாற்றங்களைச் செய்து மேம்படுத்துங்கள்.

4. பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்

உங்கள் பிள்ளைகளுக்குப் பணத்தைச் சேமிப்பதற்கும், தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கும் சொல்லிக் கொடுங்கள் நிதி தொடர்பான அடிப்படைக் கருத்துகளை உங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பது குடும்பத்தின் நிதி இலக்குகளை அவர்களுக்குப் புரியவைக்கும். மேலும், அவர்கள் வளர்ந்த பின்பு பணத்தைப் பொறுப்புடன் செலவழிக்கவும் அவர்களுக்குக் கற்றுத் தரும். சேமிப்பு மற்றும் செலவு, முதலீட்டில் அனைவரும் பங்கேற்கும்போது, அதன் பலனை அடைவதில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பெருமையுடன் பங்கேற்க முடியும்.

5. உடல்நலத்திற்கு காப்பீடு எடுங்கள்

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த, ஒரு நல்ல நிறுவனத்தில் சிறந்த ஹெல்த் இன்ஷூரன்ஸ் பொலிசி எடுப்பது அவசியம். இது அவசர மருத்துவச் செலவுகளினால் ஏற்படும் இழப்பிலிருந்து உங்களைக் காக்க உதவும். இதுவரை ஹெல்த் இன்ஷூரன்ஸ் பொலிசி எடுக்காதவர்கள் இந்த ஆண்டு கட்டாயம் எடுங்கள்.

6. குடும்பப் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

நிதித் திட்டமிடலின் அடிப்படை அம்சம், ஆயுள் காப்பீடு (Life insurance) எடுப்பதாகும். நீங்கள் சரியான ஆயுள் காப்பீட்டை எடுப்பதன் மூலம், உங்கள் குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படும். குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் இல்லாத நிலையில் குடும்ப உறுப்பினர்கள் வாழ்க்கைத் தரத்தைத் தக்கவைத்துக்கொள்ளத் தேவைப்படும் தொகையைக் கணக்கிட்டு, அந்தத் தொகை அளவுக்கு ஆயுள் காப்பீடு எடுங்கள்.

7. எதிர்காலத் தேவைக்குத் திட்டமிடுங்கள்

நம் பெற்றோர்கள் பிள்ளைகளின் அதிக முன்னுரிமை கொடுக்கிறார்கள். இருந்தாலும், பெரும்பாலான பெற்றோருக்கு முறையான நிதித் திட்டமிடல் தெரியவில்லை. இதனால், அவர்கள் பிள்ளைகளின் உயர்கல்விக்குத் தேவையான தொகையைக் கடனாக வாங்குகிறார்கள். இதனைத் தவிர்க்க, பிள்ளைகளின் உயர்கல்விக்குத் தேவையான முதலீட்டை செய்யுங்கள்.

8. கடன்களை அடையுங்கள்

நிதித் திட்டமிடலின் மிகப் பெரிய தடை கடன். சரியான நேரத்தில் உங்கள் கட்டணங்களைச் செலுத்துங்கள். நிலுவையிலுள்ள உங்கள் கடன்களை அடையுங்கள். கடன் அட்டையின் மீதித் தொகைக்கு அதிக வட்டி கட்ட வேண்டும். எனவே, அதனை வாங்குவது கூடாது. அப்படியே வாங்கியிருந்தால், சரியான நேரத்தில் அடைத்துவிடுவது நல்லது. உங்கள் கடன்களை அடைக்க முயற்சி எடுங்கள். இது வட்டிச் செலவைக் குறைக்க உதவும்.

9. ஓய்வூதியத்திற்காகச் சேமியுங்கள்

இருபது வயதிற்குள் நீங்கள் ஓய்வு காலத்துக்குச் சேமிக்கத் தொடங்க வேண்டும். இதுவரை நீங்கள் செய்யாவிட்டால் இந்த ஆண்டிலேயே தொடங்குங்கள். உங்களின் ஓய்வுகால சேமிப்பு மட்டுமே நீங்கள் வருமானம் ஈட்டுவதை நிறுத்தியபின் நீங்களும், உங்களைச் சார்ந்தவர்களும் பொருளாதார ரீதியில் தன்னிறைவுடன் வாழ்வதற்கான வாழ்க்கையை அமைத்துத் தரும். ஈ.ரி.எவ், ஈ.பி.எவ், தவிர இப்போது வங்கிகளிலும் ஓய்வூதிய சேமிப்பு கணக்குத் திட்டங்களை வழங்குகின்றன.

10. அவசரகால நிதியை உருவாக்குங்கள்

அவசர தேவைக்காக தொகையை உங்கள் சேமிப்புக் கணக்கில் ஒதுக்கி வைத்திருங்கள். திடீர் மருத்துவ செலவுகள் உங்கள் தனிப்பட்ட நிதிகளை எளிதாகப் பாதிக்கக்கூடும். உங்கள் மாதச் செலவைப்போல 24 மடங்கு தொகையை அவசர நிதியாக வைத்திருக்கத் திட்டமிடுங்கள். இதில், கடன் மாதத் தவணை தொகையும் சேரும்.

இந்த 10 தீர்மானங்களையும் ஏற்றுக்கொண்டு நீங்கள் செயற்படத் தயாரா?

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்



அண்ணார வைக்கும் சிறுமி

பார்ப்பவர்களை எல்லாம் அண்ணார்ந்து பார்க்க வைக்கிறார் 11 வயதே ஆன ஷாங் ஷியு என்ற சீன சிறுமி. அப்படி என்ன செய்கிறார் என்று கேட்கிறீர்களா...? அவர் ஒன்றும் செய்யவில்லை அவரின் உயரம்தான்.

சீனாவின் ஜினான் மாகாணத்தை சேர்ந்த இந்தச் சிறுமி தரம் ஆறில் கல்வி கற்கிறார். ஆறு அடி 7 அங்குல உயரத்தில் வளர்ந்து நிற்கிறார்.

ஷாங்கின் பெற்றோர் தொழில்முறை கூடைப்பந்தாட்ட வீரர்கள். இருவரேம் 2 மீற்றர் உயரம் கொண்டவர்கள். ஆனால் ஷாங்கோ அவர்களை விட 10செ.மீ. வளர்த்தியானவர்.

ஷங்கோவும் கூடைப்பந்தாட்ட விளையாட்டை சிறுவயதில் இருந்தே நேசித்து வருகிறாள். அவளின் உயரம் அவளுக்கு இந்த விளையாட்டில் பெரும் புகழைப் பெற்றுத் தரும் என்கிறார் அவரின் தாய். ஆனால் ஷாங் விளையாட முன்போ வேறு ஒரு சாதனை படைத்துள்ளார். என்ன என்கிறீர்களா...? உலகிலேயே அதிஉயரமான சிறுமி என்ற சாதனையைப் படைத்துள்ளார். முன்னதாக இங்கிலாந்தைச் சேர்ந்த சோபி ஹொலின்ஸ் என்ற 12 வயதுச் சிறுமி (6 அடி 2 அங்குலம்) இந்தச் சாதனையை வைத்திருந்தாள். அதைத் தட்டிப் பறித்திருக்கிறாள் ஷாங்.

மரியாதை தெரிஞ்ச பொண்ணு எல்லார்கிட்டயும் தலைகுனிந்துதான் பேசுவா...!

2 மாம்பழம்: ரூ. 2 இலட்சம்

ஜப்பானின் மியாஷாகி பகுதியில் விளையும் மாம்பழங்கள் உலகிலேயே விலைகூடியது என்கிறார்கள். இதற்கு Taiyo No Tmago என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இதன் அர்த்தம் சூரியனின் முட்டை எனபதாகும்.

ஒரு ஜோடி மாம்பழங்களின் விலை 300,000 யென்களுக்கு ஏலம் விடப்பட்டன. இதன் மதிப்பு நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபா. இந்த விலைக்குக் காரணம் இந்தப் பழங்களின் சுவையை எந்த மாம்பழங்களும் கொடுக்க முடியாது என்கிறார்கள் இதை விளைவிப்பவர்கள். ஆனால் அமெரிக்காவை தாயகம் கொண்ட இந்த மாம்பழங்கள் அங்கு ஒரு சிலடொலர்கள்தானாம்.

அப்படியென்றால் ஜப்பான் இந்த மாம்பழங்களின் அதிக விலைக்குக் காரணம் என்ன...?விளைவிக்கப்படும் முறைதான்.

குடில்களுக்குள் வளர்க்கப்படும் இந்த மாமரங்கள் தேனீக்கள் மூலம் மகரந்தச் சேர்க்கை இடம்பெறுகின்றது. ஒவ்வொரு கிளையிலும் பெரிய அளிவிலானதை மட்டுமே வைத்துக்கொண்டு ஏனையவற்றை நீக்கிவிடுவார்கள். காய் பழமாகி காம்பிலிருந்து தானாகவே விடுபடும் காத்திருந்து அதைப் பெற்று, பல கட்ட தரநிர்ணயத்தின் பின்னரே பழங்கள் விற்கப்படும். இரு மாம்பழங்களின் நிறை ஒரு கிலோ வரை இருக்கும். பல மடங்கு இனிப்புத் தன்மை கொண்டாலும் எல்லாப் பழங்களும் லட்ச ரூபாக்களுக்கு மேல் செல்வதில்லை. ஆனால் குறைந்தபட்ச விலை 5ஆயிரம் ரூபா...!

லட்ச ரூபாய்க்கு ஒரு பழமா...!



அடேங்கப்பா...!

ஒரு கட்டு விறகு 42 டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் 7,500 ரூபா) என அறிவித்து அதிர்ச்சி கொடுத்தது ஒரு ஒன்லைன் விற்பனை நிறுவனம். அமெரிக்காவை சேர்ந்த வீட்டு பாவனைப் பொருட்களை விற்கும் நிறுவனமே மக்களுக்கு இப்படி ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால், மக்களோ அவர்களின் உச்ச விலையை நக்கலடிப்பதற்காகவே குறித்த ஒன்லைன் விற்பனை நிறுவனத்தின் சமூகவலைதளப் பக்கத்திற்கு சென்று அதைக் கலாய்த்து வருகிறார்கள்.

விர்ச் மரத்தின் குச்சிகளே இவ்வாறு விறகு மற்றும் அலங்காரத்துக்காக விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கட்டு விறகில் 20 குச்சிகள் இருக்கும். அதாவது ஒரு குச்சியின் விலை 2 டொலருக்கும் சற்று அதிகமாகும். ஆனால் இதற்கு நிறுவனம் கொடுக்கும் விளக்கம் என்ன தெரியுமா...?

ஒரு கட்டு விறகில் சரியாக 20 குச்சிகள் இருக்கும். ஒவ்வொரு குச்சியும் சரியாக 31.5 அங்குலம் கொண்டது. அத்துடன் 5 அங்குலம் தடிப்பு கொண்டவை. ஒரு கட்டு விறகின் விலை 42 டொலர் என்றாலும் 10.5 டொலர்கள் செலுத்தி தவணைக் கட்டண அடிப்படையிலும் பெறலாமாம்.

அடேங்கப்பா... விலைக்குப் பின்னால் என்ன ஒரு விளக்கம்!

இப்படியும் ஒரு நன்றிக்கடன்!

தனது உயிரைக் காப்பாற்றிய மருத்துவரின் முகத்தைத் தனது முதுகில் பச்சை குத்திய நன்றிக்கடன் செலுத்தியிருக்கிறார் ஒருவர்.

நானோ சல்குறோ ஆர்ஜென்ரீனாவை சேர்ந்தவர். இவர் குடல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். சத்திர சிகிச்சை செய்யாவிட்டால் காப்பாற்ற முடியாது என்ற நிலை. ஆனால் சத்திர சிகிச்சையோ சாதாரண விடயமல்ல. சிகிச்சையின்போது உயிரே போய்விடும் நிலை.

ஆனால் மருத்துவர் பவுல் லடா இந்த சிக்கலான சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றினார். சிகிச்சைக்கு முன்னர் நானோவுக்கு நம்பிக்கையும் அளித்தார். புற்றுநோயில் இருந்து முழுமையாக குணமடைந்த நானோ தன்னை குணமாக்கிய பௌலின் முகத்தையும், வைத்தியாசாலையின் முகப்பு தோற்றத்தையும் தனது முதுகில் பச்சை குத்தி நன்றியைத் தெரிவித்திருக்கிறார்.

நன்றிக்கடன் இப்படியும் செலுத்தலாமோ...!

ஓடு... ஓடு... ஓடிக்கொண்டே இரு...!

காட்டுமான்களின் சோகக் கதை

"நூறு பேர் சேர்ந்து இருந்தாலும் வாழ்க்கை முழுதும் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும், எங்கேயும் நின்று நிதானமாக யோசிக்க முடியாது, கொஞ்சம் அசந்தாலும் சுத்தி இருக்கிற எவனாவது ஒருத்தன் தூக்கிடுவான்"

- மேலே சொல்லப்பட்டது வெறும் வாக்கியம் மட்டுமல்ல ஓர் உயிரினத்தின் (காட்டு மான் - wildebeest) வாழ்க்கை.

பிழைத்திருக்க வேண்டுமானால் நகர்ந்துகொண்டே இருக்க வேண்டும் என்கிற இயற்கையின் விதிக்குள் சிக்கிக்கொண்ட உயிரினங்களில் முக்கியமானது உயிர் காட்டுமான். பார்ப்பதற்கு மாடுகள் போலத் தெரியும். ஆனால், இவை மான் இனத்தைச் சேர்ந்தவை. தென்னாபிரிக்க நாடான தன்சானியாவில் செரங்கட்டி என்கிற தேசிய பூங்கா உள்ளது. யானை, சிங்கம், சிறுத்தை, மான்கள், கழுதைப்புலி எனப் பல விலங்குகள் இங்கு வாழ்கின்றன.

இந்தச் செரங்கட்டியிலிருந்து கென்யாவின் மசாய் மாரா தேசிய பூங்கா இருக்கிற இடத்துக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான விலங்குகள் பிழைப்புக்காக இடம்பெயர்கின்றன. இந்த நெடும்பயணத்தில் 13 இலட்சம் எருமை மாடுகள், 5 இலட்சம் தோம்சன் மான்கள், 3 இலட்சம் காட்டு மான்கள், 2 இலட்சம் வரிக்குதிரைகள் உட்பட கிட்டத்தட்ட 25 இலட்சம் விலங்குகள் பிரமாண்டப் பயணத்தைத் தொடங்குகின்றன. இதில் குறிப்பிடத்தக்க உயிரினம் காட்டு மான்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத் தொடக்கத்தில் இவை இடப்பெயர்ச்சி பயணத்தைத் தொடங்குகின்றன. இருப்பதிலேயே பயணம்தான் மிக சுவாரஸ்யமானது, அடுத்து என்ன நிகழும் என்பதே அறியாமல் தொடங்குகிற பயணங்கள், காட்டு மான்களைப் பொறுத்தவரை பயங்கரமானவை. தங்களுடைய பயணத்தில் அவை குறைந்தபட்சம் 800 கிலோ மீற்றர்கள் பயணிக்க வேண்டும். அந்த 800 கிலோ மீற்றரைக் கடப்பது என்பது தாவர உண்ணிகளுக்கு தவக் காலம்.

பாலைவனம், ஆறுகள், காடுகள் எனப் பரப்புகளை அவை கடக்கிற அந்தக் காலம் அவற்றுக்கு இன்னொரு பேறுகாலம். உயிர்போகும் எனத் தெரிந்தும் ஒரு பயணத்தைத் தொடங்குவது அவ்வளவு எளிதான காரியமில்லை. ஒரு நாளைக்குப் பல நூறு பேர் இருக்கிற குழுவில் யார் எப்போது வேண்டுமானாலும் கொல்லப்படலாம் என்கிற நிலையில் இவை இந்தப் பயணத்தைத் தொடங்குகின்றன. இவை பயணம் செய்கிற வழிகளில் சிங்கம், சிறுத்தை, கழுத்தைப்புலி, முதலை என அனைத்துமே காட்டு மான்களின் வருகைக்குக் காத்திருக்கும். நூற்றுக்கணக்கில் இடம்பெயரும் காட்டு மான்கள் இவற்றைத் தாண்டித்தான் பயணிக்க வேண்டும். காட்டு மான்களுக்கு வறட்சிக்காலம் என்றால் சிங்கங்களுக்கும் அது வறட்சிக்காலம்தான்.

நூறு காட்டு மான்கள் இருக்கிற இடத்தில் சிங்கமோ, சிறுத்தையோ இருப்பது தெரிந்தாலே மொத்த மான் கூட்டமும் பீதியாகி ஓட ஆரம்பிக்கும். பயத்தை சாதகமாக்கிக் கொள்கிற சிங்கங்கள் அதில் ஒன்றைப் பிடித்து இரையாக்கிக் கொள்கின்றன. கண்முன்னே இருக்கிற நூற்றில் ஒரு காட்டு மானை தனியே பிரிப்பது சிங்கத்துக்கும், சிறுத்தைக்கும் எளிதான வேலைதான். ஏனெனில் காட்டு மான், மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்திலிருந்து 80 கிலோ மீற்றர் வேகம் வரைதான் ஓடக் கூடியது. ஆனால், அவற்றைத் துரத்தும் சிறுத்தையின் வேகம் மணிக்கு 75 இருந்து 120 கிலோ மீற்றர். ஒவ்வொரு இடப்பெயர்வின் போதும் பல நூறு காட்டுமான்கள் பல விலங்குகளால் கொல்லப்படுகின்றன.

காட்டு மான் கூட்டத்துக்குத் தலைவன் என்பவனெல்லாம் இல்லை. முதலில் யார் செல்கிறார்களோ அவரைப் பின்தொடர்ந்து மற்ற எல்லாக் காட்டு மான்களும் ஓட ஆரம்பிக்கும். பல ஆயிரம் பேர் தனக்குப் பின்னால் இருப்பது தெரிந்தால் என்னன்னவோ செய்து விடுகிற மனிதனைப்போல இல்லை காட்டு மான்கள், கூட்டமாக இருந்தாலும் ஓடும், தனியாக இருந்தாலும் ஓடும். அதன் இயல்பே ஓடுவதுதான். காட்டு மானின் பலம் காட்டு மானுக்கு நன்கு தெரியும் என்பதால், என்ன நடந்தாலும் நடக்கட்டுமென எதிர்த்து நிற்கிற பழக்கமெல்லாம் அதன் ஜீன்களிலேயே இல்லை.

ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் இதன் இனப்பெருக்க காலம் தொடங்குகிறது. ஒவ்வொரு வருடமும் செரங்கெட்டி தேசிய பூங்காவில் 5 இலட்சம் காட்டு மான் குட்டிகள் பிறக்கின்றன. பெண் காட்டு மான்கள் பாலூட்டும் பருவத்தின்போது, ஆண் காட்டு மான்கள் தூங்காமல் அவற்றிற்குத் துணையாக இருக்கின்றன. குட்டிகள் மிகவும் பெரியவை. கன்றுகள் 20 முதல் 22 கிலோ எடையுள்ளதாக இருக்கும். கன்றுகள் பிறந்த ஒரு நிமிடத்துக்குள் நடக்கக் கற்றுக்கொள்கின்றன. பெண் கன்றுகள் தாயுடன் இருக்கின்றன. ஒரு வயதை அடைந்த ஆண் மான்கள் தனிக் குழுவாக இணைந்துகொள்கின்றன. ஒவ்வொரு குழுவும் தனித்தனியாக இருந்தாலும் இடம்பெயரும் பொழுது ஒன்றிணைந்தே செல்கின்றன.

இரவில் கன்றை ஈன்றால் வேறு மிருகத்துக்குக் காவு கொடுக்க வேண்டி வரும் என்பதால் விடியற்காலையிலோ அல்லது பகல் பொழுதுகளில்தான் கன்றுகளை ஈனும். அப்படியிருந்தும் மான் குட்டிகளை மற்ற விலங்குகள் இரையாக்கிவிடும். மற்ற விலங்குகள் தங்களின் குட்டிகளுக்கு எப்படி வேட்டையாட வேண்டுமெனக் கற்றுக் கொடுத்தால், காட்டு மான்கள் தங்களின் குட்டிகளுக்கு எப்படித் தப்பிக்க வேண்டுமென்றுதான் கற்றுக்கொடுக்கும். சிங்கம் மற்றும் சிறுத்தைகளின் குட்டிகள் 'தொழிலைக் கற்றுக்கொள்ள' ஆரம்பிப்பதே காட்டு மானின் குட்டிகளிடம்தான்.

'சாதுவாக இருக்கிறோம் என்பது சில உயிர்களுக்கு பலம். சில உயிர்களுக்கு பலவீனம்"

சிலம்பு

சிலம்பு என்பது சங்ககால தமிழ் மக்களால் கைகளிலும் (கைச்சிலம்பு) கால்களிலும் (காற்சிலம்பு) அணியப்பட்ட அணிகலனாகும். கண்ணகியின் கால்களில் அணிந்திருந்த சிலம்பைக் கொண்டே, இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற பெருங்காப்பியத்தை இயற்றினார்.

இதன் உட்புறம் விலையுயர்ந்த மணிகளால் நிரப்பப்பட்டிருக்கும். இதன் பொருட்டு இவ்வணிகலன், நடக்கும்பொழுது ஒருவித இனிய ஒலியை எழுப்பும். நாட்டியப் பெண்களால் அணியப்படும் சிலம்பானது ஆடும்பொழுது தாளத்திற்கேற்ப ஒலியெழுப்பவல்லது.

இது தற்போது ஒரு புனிதத் தன்மைகொண்ட சடங்குப் பொருளாக மட்டும் பாவனையில் உள்ளது.

பொட்டு, கடப்பு

கிராமியப் பண்பாட்டின் இழந்து போன இழந்து வரும் அடையாளங்களில் பொட்டு, கடப்பு என்பவை குறிப்பிடத்தக்கவை.

வேலி ஒன்றின் கீழ் அரைவாசி பகுதியை வெட்டி விட்டு பாதை வைத்தால் அது பொட்டு. அதாவது புகுந்து போக வழி விட்டால் அது பொட்டு.

அது போல வேலி ஒன்றின் அரைவாசிப் பகுதியின் மேலே கடந்து போக வழி விட்டு வெட்டினால் அது கடப்பு.

வடக்கு மாகாண கிராமங்களில் இந்த அமைப்பு சாதாரண விடயமாக முன்னர் இருந்தது. கால கதியில் மதில்கள் வளவை பிரிக்க பொட்டு கடப்பு என்பவை வழக்கொழிந்து வருகின்றது.

உறவு இனிக்கும் போது பொட்டு, கடப்பு தொடர்ந்தது. உறவு கசந்தால் பொட்டு, கடப்பு அடைபட்டது. போர்க் காலத்தில் ஊரடங்கு நேரத்தில் பிரதான பாதைக்கு போகாமல் பயணிக்கப் பொட்டு,கடப்பு என்பவை உதவியது. உறவை, காதலை வளர்க்கவும் இவை உதவின. இவற்றுக்கெனப் பெரும் சுவையான வரலாறு உள்ளது.

ஓ

சிவமயம்

கைலாய மாலை

(ஆக்கியோன் - முத்துராச கவிராசர்)

[மூலம், விஷய வரலாறு, அரும்பதக் குறிப்பு, ஆங்கில மொழி பெயர்ப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றுடன்]

கைலாய மாலை

யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் முதல் நூலாக ஆய்வறிஞர்களால் கொள்ளப்படு கின்றது. யாழ்ப்பாணத்து அரசர் காலத்தில் 1260 இற்குப் பின்னர் இந்நூல் எழுதப் பட்டிருக்கலாம் என்பது கணிப்பாக உள்ளது. முத்துராசக் கவிராயர் எழுதிய இந்நூலை ஆறுமுகநாவலரின் பெறாமகன் த.கைலாசபிள்ளை அச்சு உருவில் வெளியிட்டார்.

வெண்பா வடிவில் அமைந்த இந்நூல் காப்புச் செய்யுள் தவிர இரண்டிரண்டு அடிகளால் ஆன 310 கண்ணிகளால் ஆக்கப்பட்டுள்ளது. மெய்கீர்த்திமாலை, உலாவுக்குரிய பாடுபொருளையும் யாப்பிலக்கணத்தையும் கொண்டுள்ளது.

உள்ளடக்க அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள இந்நூலின் முதல் பகுதி, செகராசசேகர மன்னனுக்கு முந்தைய காலப்பகுதியைக் கூறுகிறது.

இரண்டாவது பிரிவு செகராச சேகர மன்னனின் பெருமைகள், நல்லூர் நகரத்தை அவன் அமைத்தது, அவனின் ஆட்சி சிறப்பு பற்றி கூறுகிறது. மூன்றாவது பகுதி செகராச சேகர மன்னன் கட்டிய கைலாயநாதர் கோயில் பற்றியும் அது தொடர்பான தகவல்களையும் பேசுகிறது.

பருத்தித்துறை வடை

ஈழத் தமிழர்களின் சுதேச உணவு வகைகளில் பருத்தித்துறை வடை அல்லது தட்டை வடையும் ஒன்று. தட்டை வடிவமான இந்த வடை தோற்றம்
பெற்ற இடமான
பருத்தித்துறையின் பெயரால்
அழைக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வரும் சுற்றுலாப் பயணிகளின் உணவுப் பட்டியலில் பருத்தித்துறை வடைக்கு கட்டாய இடமுண்டு. ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்த மக்களால் பல உலக நாடுகளிலும் பருத்தித்துறை வடைக்கு வரவேற்பு உண்டு. இப்போது புலம்பெயர் நாடுகளுக்கு இந்த உணவு இப்போது ஏற்றுமதியாகிறது.

பறை

ஒரு தமிழிசை இசைக்கருவியாகும். தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். 'பேசு' எனப் பொருள்படும் 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது. (நன்னூல் : 458). பேசுவதை இசைக்கவல்ல தாளக் கருவி 'பறை' எனப்பட்டது.பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே

கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என வர்ணிக்கப்படுகிறது.

செய்முறை

கோது கழட்டிய உழுந்து - 1/2 சுண்டு,
அவிக்காத கோதுமை மா - 1 சுண்டு
செத்தல் மிளகாய் பொடி - 2 தேக்கரண்டி
பெருஞ்சீரகம் - 1 தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
கறிவேப்பிலை - சிறிது (பொடியாக வெட்டி)
எண்ணெய் - தேவையான அளவு

- உழுந்தை 2 மணி நேரம் ஊற வைக்கவும்.
- உழுந்து ஊறியதும் அத்துடன் மற்றைய பொருட்களை சேர்த்து 3 மேசைக்கரண்டி எண்ணெய் விட்டு நன்றாகக் குழைக்கவும்.
- சிறிய பங்களவு உருண்டை களாக உருட்டி, பூரிக் கட்டையால் அழுத்தி வட்டமாக்கி (மெல்லிய தாக) தட்டி எண்ணெய் தடவிய வாழை இலையில் வைக்கவும்
- அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் விட்டு,கொதித்ததும் தட்டி வைத்துள்ள வடைகளை போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

(அடுப்பு மிதமான சூட்டில் இருக்குமாறு பார்க்கவும்)

இஸ்ரேல்: பாலை நிலத்தில் செழிக்கும் விவசாயம்

விவசாயத்தில் புதுப்புது உத்திகளைப் புகுத்தி சாதித்து வரும் நாடு இஸ்ரேல். அந்த நாட்டின் நிலப்பகுதி விவசாயம் செய்ய ஏற்ற நிலம் கிடையாது. பாலை நிலம் கொண்டது. ஆனால், தான் கண்டுபிடித்த புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி விவசாயம் செய்து உலக நாடுகளை வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

உலகிலேயே இந்த நாட்டில்தான் அதிகளவிலான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இஸ்ரேலில் மழையின் அளவு மிகக் குறைவு. வெயில் அதிக அளவு சுட்டெரிக்கும். நாட்டின் வடக்குப் பகுதியில் மழை சிறிதளவு பெய்தாலும், தெற்குப் பகுதி எப்போதும் காய்ந்த பூமிதான். ஜோர்தான் நதியின் நீரை "கலிலோ" என்னும் ஏரியில் சேமித்தனர். இந்த ஏரி பூமியின் மட்டத்திலிருந்து 700 அடிக்கும் கீழே இருக்கிறது. இந்த நீரை

800 அடிக்கு மேலே பம்ப் மூலம் எடுத்து இஸ்ரேலின் மத்திய மற்றும் தெற்குப் பகுதியில் விவசாயம் செய்கிறார்கள்.

நாட்டில் கொஞ்சம் பெய்யும் மழையைக்கூட வீணாக்காமல் சேமித்து சொட்டு நீர்பாசனம் போன்ற நுட்பங்கள் மூலம் பயிர்களை வளர்க்கிறார்கள். கழிவு நீரை முழுமையாகச் சுத்திகரித்து விவசாயத்திற்கு ஏற்ப பயன்படுத்தி வருகிறார்கள். இஸ்ரேல் விவசாயத்தில் உபயோகப்படுத்தப்படும் தண்ணீரில் 75 சதவிகிதம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர்தான் என்கிறது புள்ளிவிவரம்.

கடல் நீரைக் குடிநீராக்கியதுடன் மட்டுமின்றி, விவசாயத்திற்கும் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஒரு நிலத்தில் ஒரே பயிரை மீண்டும் பயிரிடுவதில்லை. சுழற்சி முறையில் பல பயிர்களைப் பயிரிடுகிறார்கள்.

1948ஆம் ஆண்டு 74 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்த இஸ்ரேல், தற்போது 4 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்கிறது. அரசுக்குச் சொந்தமான இடத்தில் குழுக்களாக விவசாயம் செய்து பங்கு போட்டுக் கொள்ளும் வழக்கமும் இஸ்ரேலில் உள்ளது.

கோதுமை, சோளம், காய்கறிகள், பழங்கள் என அதிகளவில் விளைவித்து சாதிக்கிறது. எலுமிச்சை, ஒரேஞ் போன்ற சிட்ரஸ் பழங்களை ஏற்றுமதி செய்வதில் முதலிடம் இஸ்ரேலுக்குத்தான். அதேபோல வைன், பருத்தி உற்பத்தி எனப் பலவற்றில் முன்னணியில் இருக்கிறது. லில்லி மலர்களைப் பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிட்டு உலக சாதனை படைத்திருக்கிறது இஸ்ரேல்.

இதேபோல இயற்கை விவசாயத்தையும் மீட்டெடுக்கும் பணியில் முழுமூச்சாக இறங்கியிருக் கிறது, இஸ்ரேல். வறண்ட நிலப்பகுதி கொண்ட இஸ்ரேல் விவசாய தொழில்நுட்ப வளர்ச்சியின் முதன்மையான நாடாகத் திகழ்கிறது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகமான பழ ஏற்றுமதி செய்யும் நாடும் இஸ்ரேல்தான். இதற்குக் காரணம், விவசாயிகளின் கூட்டுப் பண்ணைத் திட்டமும், இயற்கை விவசாயம்தான். வெப்பம் நிறைந்த பாலை, குடிக்க உதவாத உப்பு நீர், சீரற்ற பருவநிலை என அனைத்து சாபக்கேடுகளையும் தன்னகத்தே கொண்டது இஸ்ரேல். இவற்றை வைத்துக் கொண்டே வெற்றிகரமாக விவசாயம் செய்து வருகிறது.

ஏர் பின்னது உலகம்

சமூக விவசாயம் கற்றுத் தரும் வேர்கினியா

அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாகாணப் பகுதியில் 11 குடும்பங்கள் ஒன்றிணைந்து 320 ஏக்கர் நிலத்தில் சமூக விவசாயத் திட்டத்தைத் தொடங்கியுள்ளனர். சிறு காடுபோல் அமைத்துப் பலவகை மரங்கள், தேனீக்கள், ஆடுகள், கோழிகள், வான் கோழிகள், பன்றிகள், பசுக்கள் என வளர்த்து வருகிறார்கள். காட்டில் ஆங்காங்கு வீடுகளை அமைத்து இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வருகின்றனர், இம்மக்கள்.

கிட்டத்தட்ட 160 ஏக்கர் பரப்பில் மரங்கள்தான் உள்ளன. மீதி நிலத்தில் பல வகைப் பயிர்களை சாகுபடி செய்கிறார்கள். ஆறு வயதுக் குழந்தைகளில் இருந்து அனைவருமே அங்கு குடும்பத்தோடு விவசாயம் செய்கிறார்கள். கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களை நோக்கிச் செல்வதைத் தடுத்துக் கூடி வாழும் பழக்கத்தை மேற்கொள்ளத்தான் இத்திட்டத்தைத் தொடங்கியிருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள்.

இயற்கைக்கு வழி



பஞ்ச கவ்யா

இயற்கை விவசாயத்தில் அதி முக்கியமானது பஞ்ச கவ்யா. பசுவில் இருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. பஞ்ச கவ்யாவில் விதை நேர்த்தி செய்தால் முளைப்புத் திறன் மேம்படும். அத்துடன் பஞ்ச கவ்யா பயிரின் வளர்ச்சியை தூண்டுவதுடன் பூச்சி, நோய் தாக்கங்களை எதிர்க்கும் ஆற்றலையும் பயிர்களுக்கு வழங்குகிறது.

இயற்கை வழி விவசாயத்திற்கு இன்று மக்களிடையே பேராதரவு கிடைத்துள்ளது. நஞ்சற்ற உணவை விரும்புவோர் பலர் வீட்டுத் தோட்டங்களில் இயற்கை வழி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை சாதகமாகக் கொண்டு பஞ்ச கவ்யாவை தயாரித்து விற்பவர்களும் அதிகரித்து வருகின்றனர். ஆனால் இவை தரமானவை என்று உறுதிப்படுத்த முடியாது.

தரமான - அளவுகள் சரியான - பயிர் செய்யும் மண் சேர்க்கப்பட்ட பஞ்சகவ்யாவே அதிக பயனைத் தரும்.

தயாரிப்பது எப்படி?

தேவையான பொருட்கள்

பசுஞ்சாணம்-5 கிலோ
பசுவின் கோமியம் (சிறுநீர்)-3 லீற்றர்,
பசும்பால்-2 லீற்றர்,
பசு தயிர்-2 லீற்றர்,
பசு நெய்-1 லீற்றர்,
இளநீர்-1 லீற்றர்,
வாழைப்பழம்-1 கிலோ

பசுஞ்சாணம் 5 கிலோவுடன் நெய் 1 லீற்றர் கலந்து பிசைந்து ஒரு பிளாஸ்ரிக் வாளியில் 3 நாட்கள் வைத்து தினமும் ஒரு முறை பிசைந்துவிட வேண்டும். நான்காவது நாள் மற்ற பொருட்களுடன் இவைகளை ஒரு வாயகன்ற மண்பானை அல்லது சீமெந்துத் தொட்டி அல்லது பிளாஸ்ரிக் வாளியில் இட்டு கையால் நன்கு கரைத்து கம்பிவலையால் அல்லது இலையால் மூடி நிழலில் வைக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு 2 முறை வீதம் காலையிலும் மாலையிலும் 20 நிமிடங்கள் நன்றாக கலக்கிவிட வேண்டும். கலக்கும்போது வேப்பம்தடியைப் பயன்படுத்துவது சிறப்பானது. இது பிராண வாயுவை பயன்படுத்தி வாழும் நுண்ணுயிர்களின் செயல்திறனை ஊக்குவிக்கிறது. இந்த முறையில் 15 நாட்களில் பஞ்சகவ்யா தயாராகிவிடும். இதை 6 மாதங்களுக்கு சேமித்து வைத்திருக்கலாம்.

பயன்படுத்தும் சாணம் 7 நாட்களுக்கு உள்ளானதாகவும், சிறுநீர் அதிக் நாள் கொண்டதாகவும் இருந்தால் தரம்கூடிய பஞ்ச கவ்யா கிடைக்கும்.

பாவனை முறை

10 லீற்றர் தண்ணீருக்கு 300 மி.லீ. பஞ்ச கவ்யா என்ற அளவில் பயன்படுத்தவும். அளவை கூட்டியோ, குறைத்தோ பயன்படுத்தாதீர்கள்.

15 நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்த வேண்டும். பயிர்களுக்கு நீருடன் கலந்து அல்லது தெளிப்பான் அல்லது வேப்பம் இலைகள் மூலம் பயிர்களுக்குத் தெளிக்கலாம்.

அனைத்துப் பயிர்களுக்கும் பஞ்ச கவ்யாவை வழங்கலாம். கோழிகளுக்கும் வழங்கலாம்.

ஆரிட்டை சொல்லி அழ?

இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

கூட்டமைப்பு இன்னும் எங்களுக்கு எட்டுக்கு வைக்குமோ?

இன்னும் தாங்கள் செய்தது சரி எண்டு அடம் பிடிக்கினம் கூட்டமைப்பு. தாங்கள் ஏன் இதுவரை தமிழ் மக்களுக்குப் பொய் சொல்லிக் கொண்டு வந்ததெண்டு இப்ப கிட்டியிலைதான் தமிழ் சனத்துக்கு விளங்கினதாம். ரணிலை மைத்திரி கவிட்டுக் கலைச்சாப் பிறகுதான் எல்லாருக்கும் தங்கடை அருமை விளங்கியிருக்காம் எண்டு சுமந்திரனும், சேனாதியும் சொல்லித் திரியினம். நல்லகாலம் மைத்திரி குத்துக் கரணம் அடிச்சது. இல்லாட்டி கூட்டமைப்பின்ரை சீத்துவக் கேடெல்லாம் இன்னும் கனக்க வெளியாலை வந்திருக்கும். இது இப்ப கையிலை இருக்கிறதை வைச்சுச் சமாளிச்சுத்தானே ரணிலுக்கு மிண்டு குடுத்து நிமித்திக் கிடக்கு.

அப்ப ரணிலுக்கு மிண்டு குடுக்கேக்கை "என்ன கொண்டிசன் போட்டனியள்?" எண்டு சனம் கேட்டவை. முன்னுக்குள்ளவை செய்த மாதிரி நாங்கள் ஒண்டும் விசர் வேலை செய்யேல்லை. அதாவது ஒண்டையும் எழுதி வேண்டேல்லை. எல்லாம் வாயாலை கதைச்சு வேண்டி வைச்சிருக்கிறம். ஏனெண்டால் முன்னம் எழுதினதெல்லாத்தையும் அவர் மாறி இவர், இவர் மாறி அவர் எண்டு கிழிச்சதுதானே வழக்கம். அதாலை நாங்கள் இந்த முறை கவனமா இருந்திட்டம். ஏனெண்டால் எழுதி வேண்டினால் மஹிந்தா கொம்பனி கேக்கேக்கை காட்ட வேணும். எழுதின விசியத்தை மறைக்கேலாது. பொய் சொல்லுற வழக்கம் தமிழ் ஆக்களிட்டை இல்லை. இதுவரை தமிழ் சனத்துக்கு மாத்திரம் நாங்கள் பொய்யைச் சொன்னனாங்கள் ஏனெண்டால் நல்லது நடக்க வேணும் எண்டதுக்காகத்தான். நாங்கள் பொய் சொல்லுறமாதிரி நடிச்சதே ஒழிய பொய் சொல்லேல்லை. இப்ப வடிவாத் தெரியுதெல்லே ஏன் நாங்கள் பொய் சொன்னாங்கள் எண்டு ஹோறஸ் பாடினம் சுமந்திரனும் மாவையும்.

நீங்கள் நினைக்கிறியளே அமைரிக்காவின்ரை நல்லதுக்கும், இந்தியாவின்ரை நல்லதுக்குந்தான் நாங்கள் பிடியாப்பிடிச்சு ரணிலைக் கொண்டு வந்தனாங்கள் எண்டு. பழம் நழுவிப் பாலிலை விழுந்த கதை தெரியுமோ? ஒரு கல்லிலை இரண்டு மாங்காய் விழுத்திற கைங்கரியம் தெரியுமோ? இது தான் அது. அதுதான் இது. அது தான்டா அது. இது தான்டா இது.

சுமந்திரனுக்குத் தெரியுமோ தெரியாது இன்னும் தான் பொய்தான் சொல்லுறனெண்டு. முன்னம் சொன்ன பொய்யை மறைக்கப் பேந்தும் பேந்தும் பொய் சொல்லுறன் எண்டதும் தெரியாது, இனியும் தமிழ் சனத்தைப் பேக்காட்டேலாது எண்டதும் தெரியாது.

முதலிலை சுமந்திரன் தான் ஒரு அப்புக்காத்து எண்டும் தான் ஒரு நீதி அரசர் இல்லை எண்டதையும் தெரிஞ்சு கொள்ள வேணும். தான் தன்ரை வாதங்களை முன்னுக்கு வைக்கலாமே ஒழிய, தன்ரை சொல்லை அல்லது தன்ரை கட்சிக்காரைக் காப்பாற்ற வாதிடலாமே ஒழிய முந்தி நடந்த விசியங்களுக்கு நீதி சொல்ல வெளிக்கிடப்பிடாது.

போர்க்குற்ற விசாரணை எண்டு வந்தால் ஒண்டும் நடக்காதாம். ஏனெண்டால் இப்ப போர்க் குற்றமெண்டு புலியிலை ஆறும் அரசாங்கத்திலை ஐஞ்சுந்தான் இருக்காம். அதாலை விசாரணை சப்பெண்டு போகுமாம் எண்டு கூட்டுச் சொல்லித் திரியிது. அப்ப கூட்டின்ரை போக்கைப் பாத்தால் கொஞ்ச நாளைக்குப் பிறகு அவையே போர்க்குற்ற விசாரணை வேண்டாம் அதை எல்லாத்தையும் மறந்து ஆக வேண்டியதைப் பாப்பம் எண்டு சொல்லுவினமோ? போற போக்கைப் பாத்தால் அது தான் நடக்கப் போகுது.

இப்ப வாற பெப்ரவரியிலை சட்டம் கொண்டுவரப் போயினமாம். பாப்பம் என்ன நடக்கப் போகுதேண்டு? அப்பவே மஹிந்தாவும் கோஷ்டியும் சேந்து கோஷ்டி கானம் பாடத் துவங்கிவிட்டினம். ரணிலும் கூட்டமைப்பும் சேந்து சிங்களச் சனத்துக்கு அள்ளி வைச்சிட்டினம் எண்டு வழமையப் பாடுற பாட்டைப் போடத் துவங்கியிருக்கினம்.

மஹிந்தாவின்ரை பாட்டைச் சிங்களச் சனம் கேக்குதோ இல்லையோ, தேரர் மார் பாடுற பாட்டைக் கேக்கும். இப்ப மஹிந்தா தேரர்மாரைத்தான் பாடுறதுக்கு உசுப்பிவிடப் பாக்கிறார். ஆனால் இந்த முறை ஜேவிபி காரர் கொஞ்சம் உரமா நிக்கிறமாதிரிக் கிடக்கு. சிங்களச் சனத்திலை இருக்கிற நல்லா யோசிக்கிற சனத்தையும் கையைப்பிடிச்சு இழுத்துச் செய்தால்தான் ஏதேனும் நடக்கும்.

பண்டா செல்வா ஒப்பந்தம் போட்ட காலத்திலை அமிர்தலிங்கம் ஒரு மடை வேலை செய்தது தெரியுமோ? அந்த நேரம் பாத்து பஸ்ஸிலை பதிவு நம்பருக்கு சிங்களச் ஸ்ரீ போட்டாச்செண்டு கத்திக் குளறி கடை எரிப்பெல்லாம் நடந்து அந்த ஒப்பந்தத்தைக் கிழிச்சு எறிஞ்சும் போட்டினம். ஆனால் அந்த மோட்டு அமிர்தலிங்கத்துக்குத் தெரியேல்லை பண்டா ஒப்பந்தம் இருக்கேக்கை உந்த ஸ்ரீ விசியத்தை சுகமாச் செய்திருக்கலாமெண்டு. பிறகு வந்து நான் செய்தது பிழை எண்டு தலையைக் குனிஞ்சு கொண்டு நிக்கிறார். உவரை மாதிரித்தான் எல்லாம் நடந்து எட்டுக்கு வைச்சவை எண்டதை ஆரிட்டைச் சொல்லி அழ.

- கோளராங்கன்.

ஓய்ந்தது தமிழருக்காக ஒலித்த அமெரிக்கக் குரல்

2019 ஆம் ஆண்டின் பிறப்பே தமிழருக்கு பெரும் அதிர்ச்சி ஆண்டாக அமைந்து விட்டது. ஆம்... ஈழத் தமிழர்களுக்காக ஓங்கி ஒலித்த அருட்தந்தை பெஞ்சமின் ஹென்றியின் குரல் முதல் நாளிலேயே ஓய்ந்துபோனது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள், சர்வதேச தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் யுத்த அவலங்களை துணிச்சலுடன் வெளிப்படுத்தியிருந்தார். 2002 - 2004 காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தபோது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினராக அரசாங்கம் அருட்தந்தை பெஞ்சமினை நியமித்தது.

அமெரிக்காவை தாயகமாகக் கொண்ட அருட்தந்தை பெஞ்சமின் ஹென்றி, 1948 இல் இலங்கை வந்தார். மட்டக்களப்பில் தனது சேவையைத் தொடங்கியவர் தொடர்ந்து 70 ஆண்டுகளாக கல்வி, சமூக, மனிதாபிமானப் பணிகளைத் தொடர்ந்தார். மட்டக்களப்புக்கு வந்தவர் புனித மிக்கேல் கல்லூரியில்வரலாறு, பௌதிகவியல் பாடங்களை ஆங்கில மொழியில் கற்பித்தார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் வளர்ச்சிக்காக அதன் பொறுப்பாளராக, ஆசிரியராக கடமையாற்றியவர் 15 வருடங்கள் அதிபராகவும் பணியாற்றியிருந்தார். 1980களில் றோட்டறிக் கழகம், சமாதானக் குழு, பல்சமய ஒன்றியம், மட்டக்களப்பு செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றை நிறுவக் காரண கர்த்தாவாக இருந்தார்.

1990 இல் மட்டக்களப்பில் யுத்த நடவடிக்கையின் பொது மக்கள் பலர் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர். அவர்களை மீட்பதில் பெரும்பங்காற்றினார். அச்சமயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை பகிரங்கப்படுத்தியிருந்தார்.

நீண்டநாள்களாக உடல்நலம் குன்றியிருந்த அருட்தந்தை பெஞ்சமின் ஹென்றி தனது 94 ஆவது வயதில் இயற்கை எய்தினார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

■ நா.யோகேந்திரநாதன்

நீந்திக் கடந்த நெருப்பாறு 58

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

என்றுமில்லாதவாறு அவள் தன்னிடம் வெட்கப்படுவது சுந்தரத்துக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"ஏய்.. என்ன... இண்டைக்குப் புதிசாய் வெட்கம்", எனச் சுந்தரம் கேட்டுவிட்டு எட்டி அவளின் கையைப் பிடித்தான்.

"அங்காலை அம்மா நிக்கிறா", எனக் கிசுகிசுக் குரலில் கடிந்து விட்டு அவள் கையை இழுத்துக் கொண்டாள்.

"அப்ப.. அம்மா அங்காலை இல்லாட்டில் இரண்டு கையையும் பிடிக்க விடுவியே?", என ஒரு கேலிச் சிரிப்புடன் கேட்டான் சுந்தரம்.

"இப்பிடியான கதை என்னோட கதையாதேங்கோ...", எனச் செல்லமாகச் சிணுங்கினாள்.

"இப்பிடியான கதை கதைக்கத் தானே இஞ்சை உன்னைக் கூட்டி வந்தனான்"

"என்னது?", என வியப்புடனும் ஒருவித பயத்துடனும் முத்தம்மா கேட்டுவிட்டுக் குழப்பத்துடன் அவனின் முகத்தைப் பார்த்தாள்.

"இதிலை இரு!"

முத்தம்மா குடிசைகளின் பக்கம் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு அவனிடமிருந்து சற்றுத் தள்ளியே அமர்ந்தாள்.

"முத்தம்மா.. நான் உன்னைக் கலியாணம் செய்யப் போறன்.. வலு வலு கெதியிலை", என்றான் சுந்தரம்.

"ஆம்பிளையள் இப்பிடித்தான் காலநேரம் பார்க்காமல் இப்பிடியான விஷயங்களிலை அவசரப்படுறது போலை... இருக்க இடமில்லாமல் அலையுறம்.. அதுக்க கலியாணத்துக்கு அவசரமே?", முத்தம்மா மிக நிதானமாகவும், மிகுந்த பொறுப்புடனும் அவனிடம் கேட்டாள்.

"ஓம்.. அவசரம்தான்... எனக்கில்லை உனக்கு..."

"நீங்கள் என்ன நினைக்கிறியள்.. எனக்கு அப்பிடி ஒரு அவசரமுமில்லை", என்றாள் முத்தம்மா அவசரமாக இடைமறித்து.

"முத்தம்மா... இப்ப போராட்டத்துக்கு கட்டாயமாக ஒவ்வொரு வரும் இணைய வேண்டிய தேவையிருக்கு. நீ போராளி குடும்பமுமில்லை. அப்ப நீ போகத்தான் வேணும்."

"மண்ணை மீட்கிற தேவைக்கு போகத்தான் வேணுமெண்டால் போறதுதானே", என்றாள் அவள் நிதானமாக.

"போகத்தான் வேணும்.. போராளி குடும்பமெண்டாலும் கூட நானும் போகத்தான்வேணும். ஆனால் நீ போனால் உன்ரை வருத்தக்கார அப்பாவையும் அம்மாவையும், உன்ர தம்பியையும் ஆர் பாக்கிறது?"

முத்தம்மா எதுவுமே பேசவில்லை. ஒரு பெருமூச்சுடன் தலையைக் குனிந்து கொண்டாள். அவன் தொடர்ந்தான், "நான் உன்னைக் கலியாணம் கட்டினால் நீ ஒரு குடும்பப் பெண். பிறகு நீ எங்கடை வீட்டு மருமகள். நான் போராளியாப் போனா. உன்ரை குடும்பத்தையும் எங்கடை ஐயா, அம்மாவையும் நீ பாப்பாய்"

"ஓ.. உதுக்கே எனக்கு கலியாண ஆசை காட்டினனீங்கள்?" அவளின் கண்கள் கலங்கின.

"நாடு இருக்கிற நிலைமையில என்னைப் போலை இளந்தாரியள் போராடாமல் இருக்கலாமே? அது பெரிய துரோகமல்லே? அதுக்காக வயது போன தாய், தேப்பனைத் தெருவிலை விட்டிட்டு போக ஏலாது, ஆனால் நீ மருமோளானால் உரிமையோடை அவையைப் பாப்பாய்... இல்லையே?"

"என்னாலை முடியாது. நான் போறன்... நான் போறன்", என்று விட்டு விம்மி விம்மி அழத் தொடங்கினாள் முத்தம்மா.

"ஏய்.. நீ போனால். பெருமாளைக் கவனிக்க என்னாலை முடியுமே?" அவசரப்படாமல் யோசிச்சு முடிவு செய்"

"முடியாது... முடியாது...!", என்றுவிட்டு வேகமாகக் கொட்டிலை நோக்கி நடந்தாள் முத்தம்மா.

"ஏய்... முத்து... நில்... நில்"என சுந்தரம் கூப்பிட்டதை அவள் காதில் வாங்கவேயில்லை.

சுந்தரம் பலமாக அவளைக் கூப்பிட்ட சத்தம் கேட்டுக் குடிசைக்கு வெளியே வந்த பார்வதி முத்து அழுது கொண்டு தன் குடிசையை நோக்கி வேகமாகப் போவதைக் கண்டுவிட்டாள். அவளுக்கு எதுவுமே புரியவில்லை.

பார்வதி போய் பெருமாளின் குடிசைக்குள் எட்டிப்பார்த்தாள். முத்தம்மா வெறும் நிலத்தில் குப்புறப்படுத்தவாறு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்.

பார்வதி இனம் புரியாத குழப்பத்துடன், "முத்து என்னடி... என்னடி நடந்தது?" எனக் கேட்டவாறே அவளின் அருகில் அமர்ந்தாள்.

பார்வதியின் குரலும் மெல்ல அவள் முத்தம்மாவின் முதுகில் வருடியதும் முத்தம்மாவைத் திடுக்கிட்டு எழ வைத்தன. அவள் தடுமாற்றத்துடன், "ஒண்டும்... ஒண்டுமில்லை..!", என்றாள் தன் கண்களைத் துடைத்தவாறே.

"ஒண்டுமில்லாமலே இப்பிடி குப்புறப் படுத்து விம்மி விம்மி அழுகிறாய்", என்ன நடந்தது சொல்லு!"

முத்தம்மா எதுவுமே பேசாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

பார்வதி மீண்டும் கேட்டாள், "என்ன பேசினவனே... இல்லாட்டி அடிச்சவனே... அவனுக்கு பயிரைச் சரியாய் பாக்காட்டில் கெட்ட கோபம் வரும்"

முத்தம்மா அவசரமவசரமாக மறுத்தாள், "இல்லை... இல்லை... அவர் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை"

பார்வதி சில வினாடிகள் யோசித்துவிட்டு, "அப்பிடியெண்டால் ஏதாவது கெட்ட விதமாய் நடக்க பாத்தவனே?" என சந்தேகத்துடன் கேட்டாள்.

உடனடியாவே, "ஐயையோ... அவர் அப்பிடியான ஆளில்லை", என முத்தம்மா இடைமறித்தாள்.

"அப்ப... என்ன நடந்தது?"

முத்தம்மா தலையைக் குனிந்த வாறு மீண்டும் மௌனமாகவே பார்வதி, "நீ சொல்லாட்டில் விடு... நான் அவனையே கேக்கிறன்", என்றுவிட்டு எழுந்தாள்.

"ஐயைய்யோ... வேண்டாம்... வேண்டாம்... அவரைக் கேட்டுப் போடாதேங்கோ... நான் சொல்லுறன்", என முத்தம்மா அவளைத் தடுத்தாள்.

அந்த நேரம் பெருமாள் அங்கு வரவே முத்தம்மா தாழ்ந்த குரலில் "நான் அங்க வந்து சொல்லுறன்", என்றாள்.

மிகச் சிரமப்பட்டு நடந்து வந்த பெருமாள் அப்படியே முற்றத்தில் இருந்து விட்டார். அவர் தாங்க முடியாதகளைப்பில் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார். இரு கரங்களையும் பின்புறமாக ஊன்றியவாறு, முகத்தை வானத்தை நோக்கி வைத்தவாறு வாயைத் திறந்து கடும் முயற்சியுடன் சுவாசித்துக்கொண்டார்.

தகப்பன் வருவதைக் கண்டதும் குடிசையை விட்டு வெளியே வந்த முத்தம்மா அவரருகில் சென்று குந்தியவாறு, "என்னப்பா - என்ன செய்யுது?" எனக் கேட்டாள்.

"ம்.. கொஞ்சத் தூரம் நடந்தது.. தாங்க ஏலாமல் களைக்குது", எனத் தட்டுத் தடுமாறி சொல்லி முடித்தார் அவர்.

நிலைமையப் புரிந்து கொண்ட முத்தம்மா வீட்டுக்குள் போய் 'பம்மை', எடுத்து குளிசையை போட்டு முறுக்கி உடைத்துவிட்டு அவரிடம் நீட்டினாள். அவர் அதை வாங்கி இழுத்த போதும் முழுமையாக மருந்து உட்செல்லவில்லை. சில வினாடிகள் மூச்சை அடக்கி வைத்திருந்து விட்டு மீண்டும் அதை ஒருமுறை இழுத்தார்.

தகப்பன் படும்பாட்டைப் பார்த்தபோது, அவரை இந்த நிலையில் விட்டுவிட்டு, தான் போராளியாகப் போகமுடியுமா? என்ற கேள்வியை அவளுள் எழுப்பியது. அதற்காக இரு குடும்பங்களையும் தனது தலையில் சுமத்திவிட்டு சுந்தரம் ஆயுதம் ஏந்தப் போவதையும் அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

மிருணாள் சென் : இந்தியத் திரையுலகின் அடையாளம்

இந்தியத் திரைப்பட இயக்குநர் மிருணாள் சென் கடந்த 30-12-2018 தனது 95 ஆவது வயதில் காலமானார். அன்னாரை நினைவுகூரும் முகமாக அஜயன் பாலா எழுதிய 'உலக சினிமா வரலாறு - பாகம் 3' நூலில் உள்ள அவரைப் பற்றிய கட்டுரையின் சிறுபகுதி பிரசுரமாகின்றது.



1970 களில் வங்காளத்தில் தொடங்கிய பேர்லல் சினிமாக்கள் அலை மெல்ல இந்திக்குப் பரவி பின் கன்னடம், மலையாளம் என விரிந்து எழுபதுகளின் இறுதியில் தமிழ்நாட்டிலும் மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கி 80களின் இறுதியோடு முடிவுக்கு வந்தது.

பேர்லல் சினிமா அலையின் தந்தை என்று குறிப்பிடப்படும் இயக்குநர் மிருணாள் சென்னின் படங்கள் மனித வாழ்வைக் கூர்ந்து நோக்கி அதன் அரசியலை யதார்த்த பின்புலத்தில் பேசின. இன்று பங்களாதேஷ் என அழைக்கப்படும் கிழக்கு வங்காளத்தில் 1923ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி பிறந்த மிருணாள் சென் கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்டப்படிப்பு முடித்துவிட்டு சில காலம் இடதுசாரி இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டவர்.

சமூக மாற்றங்களைச் சினிமா எனும் ஊடகம் மூலம் அழுத்தமாகக் கூற முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட மிருணாள் சென் திரைப்படத்துறையில் 1955ஆம் ஆண்டு Raat Bhore எனும் படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். அப்படத்தில் நடித்த உத்தம்குமார் பிற்பாடு வங்காளத்தின் மிகப்பெரிய நட்சத்திரமாக அறியப்பட்டார்.

தொடர்ந்து பல படங்கள் இயக்கி வந்தாலும் அவரை இந்திய இயக்குநராக அடையாளம் காட்டியது 1969ஆம் ஆண்டு வெளியான புவன் ஷோம் என்ற படம்தான். இப்படம் பேர்லல் சினிமாவின் தொடக்கப்புள்ளி எனலாம். சத்யஜித் ரே, கட்டக்-குப் பிறகு யதார்த்தம், தீவிரமான காட்சிமொழி, இரண்டோடு கூர்மையான அரசியலையும் பேசியது.

இவரது Ek Din Pratidin படம் வேலைக்குப் போய் வீடு திரும்பாத ஒரு இளம் பெண்ணைப் பற்றிய கதை. அந்த ஒரு இரவில் அந்த வீட்டின் அனைவரும் பதட்டமாகி என்னென்ன செய்கிறார்கள் என காட்சிகளில் சொல்லிக் கொண்டிருக்க, மறுநாள் காலையில் அவள் யாரையும் எதையும் பொருட்படுத்தாமல் அசட்டையாக அலட்டிக்கொள்ளாமல் வீட்டுக்குள் நுழைய படம் முடிகிறது. அந்த இரவில் அவள் என்ன ஆனாள்? எங்கே போனாள்? எதையும் இயக்குநர் சொல்லவில்லை. பலரும் அவரைத் துரத்தித் துரத்திக் கேட்டனர். 'அவள் என்ன ஆனாள் யாரிடமாவது படுத்தாளா' எனக் கேட்க மிருணாள் சென் 'எனக்குத் தெரியாது, ஒருவேளை இருந்தாலும் இருக்கலாம்' எனச் சொல்ல, இந்தப் பதில் அப்போது பெரும் அதிர்ச்சியை ஊடகங்களின் மத்தியில் உருவாக்கியது.

Chorus (1974),Mrigayaa (1976), Oka Oori Katha (1977), Akaler Sandhane (1980), Kharij(1983), Khandhar (1984), Chaalchitra (1987) உட்பட மொத்தம் 28முழு நீளப்படங்களையும் 4 ஆவணப்படங்களையும் இயக்கியிருக்கிறார். மொஸ்கோ சர்வதேச திரைப்பட விழா, பெர்லின் சர்வதேச திரைப்பட விழா, கேன்ஸ் திரைப்பட விழா - ஜூரி விருது என உலகின் சிறந்த திரைப்பட விழாக்கள் அனைத்திலும் கலந்துகொண்டு இவரது திரைப்படங்கள் விருதுகள் பல பெற்றுள்ளன. 32 ஆவது பெர்லின் திரைப்பட விழாவின் நடுவராகவும் பணியாற்ற அழைத்து விழாக்குழு இவரைப் பெருமைப்படுத்தியுள்ளது. இந்தியாவில் இவரது படங்கள் 19இற்கும் மேற்பட்ட தேசிய விருதுகளைக் குவித்திருக்கிறது.



காட்சிக் கோணல்கள்

வலுவிழந்து வயோதிபம்
தட்டுகின்ற பழுத்த இலைகள்
கீழே சிதறிச் சருகாகின்றன.
இந்தக் கொளுத்தும் கோடையும்
நீரைக் கொப்பளிக்கும்
மேகக் கூட்டங்களும்
வானிலை அறிக்கையையும்
காலநிலை மாற்றத்தையும்
தலைப்புச் செய்திகளாய் சொல்லி
மார்பிலடித்துக் கொண்டு
கதறியழுகின்றன.
சுழன்று சரிகின்ற விதியின்
விஞ்ஞாபனத்தில் கற்றுத் தேற
காட்சிக் கோணங்கள்
எத்தனையிருந்தாலும்
யாரும் சிதறுகின்ற இலைகளையும்
விழுந்து தவிக்கின்ற விதைகளைப்
பற்றியும் எவ்வித
கவலையும் கொள்வதில்லை.
விழுந்த விதைகள்
வெயிலில் சிக்கித் தவித்தாலும்
மழைநீர் வெள்ளத்தில் அவை
மண்ணைத் துளைத்து முளை விட்டு
உயிர்ப்போடு நிமிர்ந்து எழும்.

- நஸார் இஜாஸ் -

நூல் அறிமுகம்

நிலாந்தி சசிகுமாரின் 'முற்றுப்பெறாத கவிதைகள்'

-பேராசிரியர் செ.யோகராசா

1986களின் பின் ஈழத்தில் பல கவிதாயினிகள் தொடர்ந்து தம்மை இனங்காட்டி வருகின்றனர். ஒரு சிலர் தமது தொகுப்புகளை வெளியிடாது இருந்து வருகின்றனர். வேறு சிலர் தமது கவிதைகளைத் தமக்குள் பூட்டி வைத்துக்கொள்கின்றனர். இவ்வளவு காலம் தமது மன உணர்வுகளைப் பூட்டி வைத்திருந்தது போன்று. அத்தகைய இளம் கவிதாயினி தான் நிலாந்தி சசிகுமார். தனது மன உணர்வுகளை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்த ஒரே ஆயுதம் ஏனைய பலர் போன்று கவிதை என்ற ஊடகத்தைத்தான். இத்தொகுப்பில் உள்ள கவிதைகளுள் ஒரு பெண் தன் இருப்பை, இருப்பின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் பாங்கில் எழுந்துள்ள கவிதைகளைப் பற்றி முதலில் குறிப்பிட்டாக வேண்டும்.உதாரணமாக

நான் இருக்கிறேன்
இன்னும் உயிருடன்
புன்னகை சிந்தும் கண்ணீராக
கண்ணீர் வடிக்கும் புன்னகையாக
கலைந்த கேசமாக
களையிழந்த மாலையாக
மறைக்கப்பட்ட சூரியனாக
பகல்நேரத்து நிலவாக கை கால்கள்
கூட்டப்பட்ட குழந்தையாக
இன்னும் நான் இருக்கிறேன்.

என்ற கவிதையில் இன்றைய சராசரித் தமிழ்ப் பெண்ணின் உண்மைநிலை மிக நுட்பமான முறையில் சிறந்த படிமங்களின் ஊடாக வெளிப்படுவதை அவதானிக்கிறோம். பெண்ணின் இருப்பில் ஆரம்பித்து ஈழத்து மண்ணின் இன்றைய சமூக, அரசியல் இருப்பு வரை பல்வேறு விடயங்களை உணர்ச்சி பூர்வமான முறையில் வெளிப்படுத்தும் கவிதைகளையும் கொண்டது.

இவரின் பலமும் பலவீனமும் மட்டுப் படுத்தப்பட்ட வாசிப்பை இவர் கொண்டுள்ளமை தான். மிக இயல்பான முறையில் உணர்ச்சி வெளிப்படுவது பலமாகின்றது.



சமகால கவிதாயினிகளின் வரிசையில் சேர்வதெனில் அதற்கான வலு போதாமலிருப்பது பலவீனமாகின்றது. தன்னை உணர்ந்த இக்கவிதாயினி அதனையும் உணர்ந்து சோர்வின்றிப் பயணிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகின்றது.

இந்திய "ரூபா" வைத்தியர்கள் எமக்கு முன்னுதாரணமாக...

பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்

இரு தினங்களுக்கு முன்னம் முகநூலில் ஒரு வீடியோ காட்சியைப் பதிவிட்டிருந்தனர். அதைப் பார்த்தபோது அது ஒரு திருவிழாவில் சுவாமி ஊர்வலமாக எடுத்து வருவதைப் போலத் தென்பட்டது. மக்கள் பூக்களைத் தூவிக் கொண்டிருந்தனர். கற்பூரச் சட்டிகளை ஏந்திக் கொண்டிருந்தனர். தொடர்ந்து பார்த்தபோது சில மூதாட்டிகள் நெஞ்சிலே அடித்து அழுது கொண்டிருந்தனர். அந்த வீடியோவிற்குக் கீழே பின்வரு மாறு ஒரு செய்திக் குறிப்பொன் றும் இடப்பட்டிருந்தது. "வரு வது சாமி ஊர்வலமல்ல. ஊரே கையெடுத்து கும்பிட்ட வடசென்னை 5 ரூபாய் டொக்டர் ஜெயச்சந்திரனின் இறுதி ஊர்வலம்."

ஆம் பல வருடங்களாகத் தன்னிடம் சுகயீனம் என்று வருபவர்களிடம் வெறும் ஐந்து ரூபாவை மட்டுமே வாங்கிக் கொண்டு வைத்தியம் பார்த்தவர் அந்த வைத்தியர் ஜெயசந்திரன். அவர் இறந்துவிட்ட பிறகு அவரது பூதவுடலைத் தகனக் கிரியைகளுக்காக ஊர்வலமாக எடுத்து வந்தபோதுதான் அந்த வீடியோவை எடுத்தவர் முகநூலில் பதிவிட்டிருந்தார்.

கடந்த 1985 களில் நான் சென்னை மந்தைவெளியில் இருந்தபோது அங்கும் ஒரு வைத்தியர் ஒரு ரூபாவை மட்டும் பெற்றுக் கொண்டு வைத்தியம செய்ததைக் கண்டிருக்கிறேன். மந்தைவெளியிலுள்ள சேரிகளிலும், குப்பங்களிலும் இருக்கின்ற மனிதர்கள் அங்கே அலைமோதுவதைப் பார்த்திருக்கிறேன். நானும் ஒருநாள் அவரிடம் சென்று சுகயீனத்திற்கு மருந்து எடுத்திருக்கிறேன்.

டொக்டர் ஜெயச்சந்திரன்

அதுபோல 1950 களில் யாழ்ப்பாணம், சுதுமலையில் வாழ்ந்த அண்ணாமலைப் பரியாரியும் ஏழைகளிடம் பணம் அறவிடுவதில்லை என்ற வாய் வழிச் செய்தியும் உண்டு. காலாகாலமாக மருத்துவம் சேவையாகத்தான் பார்க்கப்பட்டு வந்தது. அண்மைக்காலமாகத்தான் அது வியாபாரமாக மாறிக் கொண் டது. உயிரோடும், உடலோடும் விளையாடுகின்ற களமாகத் தற்போது தனியார் வைத்திய சாலைகள் விளங்குகின்றன. கேட்பதற்கு எவருமில்லாதவாறு அவர்கள் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இயற்கையாகப் பெறவேண்டிய பல பிள்ளைகளை வைத்தியரின் மிரட்டல்களுக்குப் பயந்து சத்திர சிகிச்சை மூலம் பெற்றுக் கொள்கின்றனர் பெற்றோர்கள். அரச வைத்தியசாலையில் எதுவித செலவுமின்றிப் பெறக் கூடிய பிள்ளைப்பேறுக்கு இலட்சங்களைச் செலவு செய்து செயற்கை முறையில் பெற்றெடுக்கின்ற பெற்றோர்களைக் கேட்டால், "வைத்தியர் அப்படிச் சொல்லும்போது, அவரை மீறி எம்மால் என்ன செய்ய முடியும்? எமக்கு எமது பிள்ளைதான் முக்கியம் என்றபடியால் அவர்கள் ஆலோசனைக்குக் கட்டுப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்" என்கின்றனர் அவர்கள்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட தமது உறவுகளை, பல இலட்சங்களைச் செலுத்தியும் சிகிச்சை பலனளிக்காமல் பிணமாகக் கொண்டு செல்வதையும் அவ்வப்போது கண்டிருக்கிறோம். முன்னொரு காலத்தில் 'நீ என்னவாக ஆகப் போகிறாய்?" என்று சிறுவர்களைப் பார்த்து பாட்டி அல்லது பாட்டா கேட்பார். அவர்கள் பலவாறு பதில் சொல்வர். உடனே அவர்களை இடைநிறுத்தி "இல்லை இல்லை நீ டொக்டராக வேணும். ஏனெனில் அப்போதுதான் நீ பலருக்குச் சேவை செய்யலாம்." என்று சேவையை முதன்மைப்படுத்தி தொழிலைச் செய்ய வேண்டும் என்று வழிகாட்டினர் முன்னோர். ஆனால் தற்போது பெருவாரியாகச் சம்பாதிக்கலாம் என்றே திட்டமிட்டுப் பலர் வைத்தியத்துறையை நோக்கிச் செல்கின்றனர்.

மேல் குறிப்பிட்ட இந்திய ரூபா வைத்தியர்களைப் போலவும், சுதுமலை அண்ணாமலைப் பாரியாரியாரைப்போலவும் வைத்தியத்தை சேவையாகக் கருதுகின்ற மனோபாவத்தை வைத்தியர்களை வளர்க்க வேண்டும். ஒரு நோயாளி வைத்தியரை நம்பியே தன்னை ஒப்படைக்கிறார். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக வைத்தியர்கள் இருக்க வேண்டும். பொறுப்பற்ற வைத்தியத்துறையால் தமது கண்களைப் பலர் இழந்திருக்கின்றனர். இது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவம். அதற்குப் பொறுப்பான வைத்தியரும், அவர் சார்ந்த வைத்தியசாலையும், அவருடன் பணியாற்றியவர்களும் தம்மை அக் குற்றத்திலிருந்து விடுவிக்கப் பல காரணங்களைச் சொல்லலாம். ஆனால் கண்ணை அல்லது கண்களை இழந்தவருக்கு அது ஈடுசெய்ய முடியாத இழப்பு என்பதே உண்மை.

வைத்தியத்துறையைச் சேவை மனப்பான்மையோடு முன்னெடுக்க வேண்டிய பயிற்சி வகுப்புகளை மருத்துவக் கல்லூ ரி மாணவர்கள் மத்தியில் நடத்தவும், அது பற்றிய பூரண விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்ப்படுத்தவும் வைத்தியத்துறை ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தமது அனுபவக்குறைவினால் மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்ப்படுத்துவதென்பது கொடுமையே. வைத்தியம் சேவையாகப் பார்க்கப்பட்ட முன்னோர்கள் எமக்கு முன்னுதாரணமாகட்டும். அவர்களை அடியொற்றி சிறப்பான சுகாதாரசேவையை அமைக்க முயற்சிப்போம்.

அரசனை....

(16ஆம் பக்கம் பார்க்க)

சுமந்திரனால் கூறப்படும் சிங்கள மக்களிடம் தான்றியுள்ள நல்லெண்ணம் காரணமாக நத்துக் கணிப்பில் அது வெற்றி பெற்றாலும் து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது ன்பது எவ்வகையிலும் சாத்தியப்படப் ாவதில்லை.

அப்படியானால் ஏன் இது இப்போது ன்வைக்கப்படுகின்றது என்பதும் யாருடைய வைக்காக முன்வைக்கப்படுகின்றது ர்பதும் இப் பொழுது எழும் கேள்விகளாகும். ப்ரவரி நான்காம் நாள் இலங்கையின் ந்திர தினம் என்பதை நாம் அறிவோம். தேபோன்று மார்ச் மாதத்திற்கும் ஒரு கியத்துவம் உண்டு.

அதாவது மனித உரிமைகள் பேரவையின் ட்டத்தொடர் இடம்பெறும் மாதம். ிலும் இலங்கை தொடர்பாக இலங்கையின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற வழங்கப்பட்ட மேலதிக இரண்டு வருடகால அவகாசம் முடிவுக்கு வருகின்றது. ஆனால் இங்கு வாக்களிக்கப்பட்ட பல விடயங்களை இலங்கை இன்னமும் நிறைவேற்றவில்லை. மேலும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்பு, போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் போன்ற விடயங்களில்கூட எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படியான நிலையில் இலங்கை அரசு ஜெனிவாவில் பதில் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

இந்தநிலையில் பெப்ரவரியில் உத்தேச அரசியலமைப்பின் வரைபை நாடாளுமன்றில் முன்வைத்து அங்கீகாரம் பெறுவதன் மூலம் ஜெனிவாவில் இனப்பிரச்சினைத் தீர்வு நடவடிக்கை முன்வைக்கப்பட்டு விட்டதெனவும் இதன் மூலம் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட முடியும் எனவும் ஜெனிவாவில் அரசால் ஒரு பதில் முன்வைக்கப்படும். அதற்கு தமிழ்த் தரப்பின் ஆதரவும் உண்டு எனப்படும்போது அரச தரப்பின் முன்வைப்புக்கு ஒரு நம்பகத்தன்மையும் வலிமையும் உண்டு.

அதாவது இந்த வரைபு முன்வைக்கப்படுவது ஜெனிவாவில் வழங்கக்கூடிய நெருக்கடியை தவிர்க்கும் நோக்குடனேயோ என்ற கேள்வி எழுகிறது. இப்படி நெருக்கடி நேரங்களில் ஆறு கடக்கும்வரை அண்ணன், தம்பி என்றும் அதன் பின் நீ யாரோ, நான் யாரோ என்பதும் தமிழ் மக்கள் சிங்கள் ஆட்சியாளர்களிடம் சந்தித்த அனுபவங்கள்.

இந்த அரசியலமைப்பு முன்வைப்பு என்பது தமிழ் மக்களுக்கு ஜெனிவாவில் ஏற்படக்கூடிய வாய்ப்பை மழுங்கடிக்கும் நோக்கம் கொண்டதா? அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துணை போகிறதா என்பதும் கேள்விகளாக எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது. ●

'96' படத்தின் தெலுங்கு மீளுருவாக்கத்தில் த்ரிஷாவின் பாத்திரத்தில் சமந்தா நடிக்கவுள்ளார். முன்னதாக தெலுங்கிலும் த்ரிஷாவே நடிப்பார் என அறிவிக்கப்பட்டது. ஆனால், சமந்தாவே தெலுங்கில் முன்னணி நடிகை என்பதால் அவரை ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

நாயகியை மையப்படுத்திய புதிய படம் ஒன்றில் ஒப்பந்தமாகியுள்ளார் அமலாபால். இதில் அவர் அறுவைச் சிகிச்சை நிபுணராக நடிக்கிறார்.

உண்மைக்கதையை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் உருவாகிறது. மார்ச்சில் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

கே.வி.ஆனந்த் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்துக்கு 'காப்பான்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. மோகன்லால், ஆர்யா, சாயிஷா சைகல் எனப் பலர் நடிக்கும் இந்தப் படத்தின் முதல்பார்வை புதுவருட நாளில் வெளியானது.

'கஜேந்திரா' படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் ஆஷா சைனி. தற்போது வெப் சீரியலிலும் நடிக்கிறார்.

திரைப்படங்களை விட வெப் சீரியல்களில் ஆடை குறைப்பு காட்சிகளுக்கு தடை இல்லை. இந்நிலையில் நிர்வாணமாக நடிக்கவும் தயார் என அறிவித்துள்ளார்.

சித்தார்த், கேத்ரின் தெரேசா இணைந்த படத்துக்கு அருவம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. அமானுஷ்ய நிகழ்வுகள் படம் முழுக்க ஆக்கிரமித்துள்ளது என்கிறது படக்குழு.

'பிங்க்' படத்தின் தமிழ் மீளுருவாக்கத்தில் அஜித் நடிக்கிறார். இதில் 3 நாயகிகள். ஒரு வேடத்தில் நஸ்ரியா, மற்றொரு வேடத்தில் இயக்குநர் பிரியதர்ஷனின் மகள் கல்யாணி நடிக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. மூன்றாவது வேடத்தில் நடிக்க ஸ்ரத்தாவிடம் பேசியுள்ளனர்.



2018 விடைபெற்ற ஆண்டின் விளையாட்டு தருணங்கள் சில...

கிரிக்கெட்

மார்ச் மாதம் கேப்டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்க - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் பந்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஸ்ரீவ் சிமித், டேவிட் வோணர் ஆகியோருக்கு ஒரு வருடத் தடையும் பாங்குறொவ்றுக்கு 9 மாத காலத் தடையும் விதிக்கப்பட்டது.

ஏப்ரலில் நடந்த ஐ.பி.எல். போட்டிகளில் 2 வருட சூதாட்டத் தடையின் பின்னர் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்ற போதிலும் காவிரி நீர்ப் பிரச்சினை காரணமாக சென்னையில் ஒரு போட்டி மட்டுமே நடைபெற்றது.

செப்ரெம்பரில் நடைபெற்ற ஆசியக் கிண்ணப் போட்டியில் இந்தியா, பங்களாதேஷை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றது.

ஓகஸ்டில் இங்கிலாந்து - இந்திய அணிகள் எட்ஜ்பாஸ்ரனில் விளையாடிய போட்டி இங்கிலாந்தின் 1000 ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

லோர்ட்ஸ் மைதானத்தில் 33 வருடங்களும் ஒட்டுமொத்தமாக 49 வருடங்கள் ஆடுகளப் பராமரிப்பாளராக விளங்கிய இங்கிலாந்தின் மிக் ஹன்ட் இத்தொடரின் லோர்ட்ஸ் போட்டியோடு ஓய்வு பெற்றார்.

ஒக்ரோபரில் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான சர்வதேச ஒருநாள் போட்டியில் விராட் கோலி அதிவேக 10,000 ஓட்டங்கள் பெற்ற சாதனையைப் படைத்தார்.

மேற்கிந்தியத் தீவுகளில் நவம்பர் 9 - 24 வரை நடைபெற்ற உலகக் கிண்ண மகளிர் இருபதுக்கிருபது தொடரில் அவுஸ்ரேலியா 4 ஆவது தடவை சம்பியனானது.

உதைபந்தாட்டம்

ஏப்ரலில் நடைபெற்ற றியல் மட்ரிட் - ஜுவென்ரஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் றொனால்டோ அடித்த பைசிக்கிள் கிக் கோல் ஒட்டுமொத்த உதைபந்தாட்ட ரசிகர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது.

ரஷ்யாவில் ஜூன் மாதம் நடைபெற்ற 21 ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பிரான்ஸ் இறுதிப் போட்டியில் குறோசியாவை 4:2 என்று தோற்கடித்து இரண்டாவது தடவை சம்பியனானது.

முதன் முறையாக உலகக் கிண்ணத்தில் நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் Vedio Assistant Referee தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜூலை மாதம் றொனால்டோ றியல் மட்ரிட் அணியில் இருந்து விலகி இத்தாலியின் ஜுவென்ரஸ் அணிக்கு மாறினார்.

பிபாவின் சிறந்த வீரர் விருது மற்றும் தங்கப்பந்து விருது ஆகியவற்றை குறோசியாவின் லூகா மொட்றிச் வென்றதன் மூலம் கடந்த 10 ஆண்டுகளாக இவ்விருதுகளைப் பெற்று வந்த மெஸியினதும் றொனால்டோவினதும் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

நவம்பர் 15 பிறேசில் உதைபந்தாட்ட அணியின் சீருடையை வடிவமைத்த பேராசிரியர் ஆல்ரி ஷீலே 83 ஆவது வயதில் காலமானார்.

நவம்பரில் கொலம்பிய உதைபந்தாட்ட வீரரான குயின்ரெறோவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

டிசெம்பரில் மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் முகாமையாளரான ஜோஸ் மௌறின்கோ அதிரடியாக நீக்கப்பட்டார்.

ரென்னிஸ்

ஜனவரியில் நடைபெற்ற அவுஸ்ரேலியன் ஓப்பன் தொடரில் ரோஜர் பெடரர் 20 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்

செப்ரெம்பரில் நடைபெற்ற அமெரிக்க ஓப்பன் தொடரின் இறுதிப்போட்டியில் ஜப்பான் வீராங்கனை நயோமி ஒசாகா முதன்முறை சம்பியன் பட்டம் வென்ற இப்போட்டியில் நடுவரான கார்லொஸ் ரமோசுடன் வாக்குவாதப்பட்ட செரீனா வில்லியம்ஸ் விமர்சனத்திற்குள்ளானார்.

நவம்பரில் ஜோகோவிச் ஏ.ரி.பி.தரப்படுத்தலில் 5 மாதங்களில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தார்.

நவம்பரில் நடைபெற்ற ஏ.ரி.பி உலக இறுதிச்சுற்றுப் போட்டியில் பெடரர், ஜோகோவிச் ஆகியோர்களை வீழ்த்தி ஜேர்மனியின் 21 வயது அலெக்சாண்டர் சுவரொவ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

பட்மின்ரன்

டிசம்பரில் நடைபெற்ற உலக வேள்ட் ரூர் சம்பியன் ஷிப் போட்டியில் பி.வி.சிந்து, ஜப்பான் வீராங்கனையான நயோமி ஒகுஹராவை வீழ்த்தி உலக சம்பியன் பட்டத்தை முதல் தடவை கைப்பற்றினார்.

டிசம்பர் காஷ்யப் - சாய்னா நேவால் திருமணம் நடைபெற்றது.

செஸ்

நவம்பரில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன் ஷிப் தொடரில் நோர்வேயின் மக்னஸ் கார்ள்சன் அமெரிக்க வீரரான பபியானோ கரூனாவை தோற்கடித்து மீண்டும் சம்பியனானார்.

ஹொக்கி

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற உலகக் கிண்ண ஹொக்கித் தொடரின் இறுதிப் போட்டியில் நெதர்லாந்தை வீழ்த்தி பெல்ஜியம் முதன்முறை சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

வலைப்பந்தாட்டம்

செப்ரெம்பரில் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆசியக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கை சம்பியனானது.

குத்துச்சண்டை

நவம்பரில் டெல்லியில் நடைபெற்ற மகளிர் உலகக் குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் மேரி கோம் 6ஆவது தடவை சம்பியனானார்.

மெய்வல்லுநர்

சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளனப் புதிய நிறைவேற்று அதிகாரியாக பிரித்தானியாவின் முன்னாள் தடைதாண்டல் ஓட்ட வீரரான ஜொனதன் றிட்ஜியோன் நியமிக்கப்பட்டார்.

சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளன விருதுகள் கென்ய வீரரான எலியுட் கிப்சொக்குக்கும் கொலம்பிய வீராங்கனையான கத்தரின் இபர்குவெனுக்கும் வழங்கப்பட்டன.

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் பெப்ரவரி 9 - 25 வரை தென்கொரியாவின் பியோங்சங் நகரில் நடைபெற்றன.

21ஆவது பொதுநலவாயப் போட்டிகள் ஏப்ரல் 4 - 15 வரை அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்ற் நகரில் நடைபெற்றன.

18ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஓகஸ்ற் 18 -செப்ரெம்பர் 2 வரை இந்தோனேசியாவின் ஜகார்த்தா மற்றும் பலேம்பங் நகரங்களில் நடைபெற்றன.

3ஆவது இளையோர் ஒலிம்பிக் போட்டிகள் ஒக்ரோபர் 6 - 18 வரை ஆர்ஜென்ரீனாவின் புவனர்ஸ்அயர்ஸ் நகரில் நடைபெற்றன.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 04.01.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.